பக்கங்கள் : பதினாறு


Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 30 புதன்கிழமை (15-09-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:295



ஈழத்தமிழர் விடிவுக்காக உண்ணாவிரதம் இருந்து உயிர்துறந்த தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் 17ஆவது ஆண்டு நினைவு நாள்கள் இன்று ஆரம்பமாகின்றன. இங்கே பௌத்த துறவி ஒருவர் திலீபனின் உருவப்படம் ஒன்றைக் கையில் வைத்திருப்பதைக் காண்கிறீர்கள். புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பணி மனைக்கு நேற்று வருகைதந்த தென்னிலங்கை பௌத்த துறவிகளில் ஒருவரே இவர்.

அரசியல்துறைப் பணிமனையில் எடுக்கப்பட்ட படம் இது. *(படம்: தேவா)*

## சொல்ஹெய்ம் வந்து சேர்ந்தார்; ஆனாலும்

# சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும் அறிகுறி ஏதுமேயில்லை

## வழமைபோல இம்முறையும் அனுசரணைக்குழு வெறுங்கையோடு நோர்வேக்குத் திரும்பும்

கொழும்பு,செப்ரெம்பர்15

**இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணும்முயற்சிகளில் ஈடுபடும் நோர்வே அனுசரணைக்குழுவின் பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்ம் நேற்றுமுன்தினம் இரவு மீண்டும் கொழும்பு வந்துசேர்ந்தார். சமரச முயற்சிகள் தொடர்பான தனது அனுசரணைப் பணியின் ஒரு கட்டமாகப் பலதரப்பினருடனும் அவர் நேற்றுப் பேச்சுக்களை ஆரம்பித்தார்.**

**எனினும், இந்தத் தடவையும் அவரது விஜயத்தின்போது அமைதி முயற்சிகளை - சமாதான நடவடிக்கைகளை - முன் நகர்த்துவதற்கான பெரிய மாற்றம் ஏதும் (Break through) ஏற்படுத்துவதற்கு வாய்ப்பேதும் தென்படவில்லை என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.**

எரிக் சொல்ஹெய்ம், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் சகிதம் நேற்றுப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி., பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் மற்றும் சில அரச, எதிர்க்கட்சி அரசியல் பிரமுகர்கள், சில பத்திரிகைகளின் ஆசிரியர்கள் எனப் பலதரப்பினரையும் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது.

நேற்றுக்காலை முதல் அவர்கள் தொடர் சந்திப்புக்களில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர்க்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்ம் இன்று யாழ். வருகின்றார்

யாழ்ப்பாணம்,செப்.15

கொழும்பு வந்துள்ள நோர்வே சமாதானக் குழுவின் விசேட ஆலோசகரான எரிக்சொல்ஹெய்ம் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாக அறிந்துகொள்வதற்காக நோர்வே தூதரகத்தின் 2 ஆவது சிரேஷ்ட செயலாளர் கிஸேர் ஸரி ட்ரொம்ஸ்ரால் கடந்த மாதம் 26 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் சிறப்புற நடந்த தீர்த்தோற்சவம்

யாழ்ப்பாணம்,செப்.15

நல்லூர் கந்தசுவாமி கோவில் பெருந்திருவிழாவின் தீர்த்தோற்சவம் நேற்றுக்காலை மிகுந்த பக்திபூர்வமாக நடைபெற்றது.

பெருந்திரளான அடியார்கள் ஆலயத்தை நிறைத்திருக்க தீர்த்தக்கேணியில் தீர்த்த உற்சவம் நடந்தேறியது.

குடாநாட்டின் நாலாபுறங்களிலும் இருந்து பறவைக்காவடிகளும், செடில்காவடிகளும் நேற்றுப் பிற்பகல்வரை ஆலயம் நோக்கி வந்தவண்ணம் இருந்தன.

நேற்றைய தீர்த்த உற்சவத்தின்போது வழமை

(16ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களோ, விடுதலைப் புலிகளோ சிங்களவர்களுக்கு எதிரிகளே அல்லர்!

## தெற்கு ஊடகவியலாளர் குழுவிடம் தமிழ்ச்செல்வன் விளக்கம்

கிளிநொச்சி,செப்.15

"தெற்கில் உள்ள சாதாரண சிங்கள மக்களுக்குத் தமிழ் மக்களோ, விடுதலைப் புலிகளோ எதிரிகள் அல்லர். சிங்கள மக்கள் எத்தகைய உரிமைகளுடனும், கௌரவத்துடனும் வாழ்கிறார்களோ, அதேபோன்று எமது தாயகப் பிரதேசத்தில் நாமும் கௌரவத்துடனும், உரிமைகளுடனும் வாழவேண்டும் என்பதற்காகவே போராடுகின்றோம். இந்தச் செய்தியை தெற்கு சாதாரண சிங்கள மக்களுக்குத் தெரிவியுங்கள்."

கிளிநொச்சிக்கு வந்துள்ள தென்னிலங்கைச் செய்தியாளர்களுடன் நேற்றுத் தாம் நடத்திய சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இப்படிக் கூறினார்.

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் கிளிநொச்சிக்கு வந்துள்ள தென்பகுதிச் செய்தியாளர்கள் ஐம்பது பேர் அடங்கிய குழுவுடன் தமிழ்ச்செல்வன் நேற்று முற்பகல் 10 மணிக்குக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பை ஆரம்பித்து வைத்து தமிழ்ச்செல்வன் தெரிவித்ததாவது:-

இங்குள்ள உண்மை நிலைமையையும் விடுதலைப் புலிகளின் உண்மையான - நேர்மை

(16ஆம் பக்கம் பார்க்க)

## பதினொரு பவுண் தங்க நகைகள் ஆலயச் சூழலில் நேற்றுத் திருட்டு

யாழ்ப்பாணம்,செப்.15

நல்லைக் கந்தன் ஆலயத்தின் தீர்த்தோற்சவமான நேற்று சுமார் 11 பவுண் நிறையுடைய நகைகள் திருடப்பட்டுள்ளன.

ஆலயத்தில் இயங்கும் உற்சவகால சிறப்புச் செயலணியில் இது தொடர்பான முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மூன்று தங்கச் சங்கிலிகள் மற்றும் ஒரு தாலிக்கொடி என்பனவே திருடப்பட்டுள்ளன.

பெரும்பாலான திருட்டுக்கள் ஆலய தீர்த்தக்கேணியடி, வசந்த மண்டபப் பகுதி ஆகிய இடங்களில் இடம்பெற்றுள்ளன என்றுதெரிவிக்கப்பட்டது.

சன நெருக்கடியைப் பயன்படுத்தி திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

சாவகச்சேரியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை

(16ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபன் நினைவுநாள் பிரதான நிகழ்வுகள் நல்லூரில்



இந்திய வல்லாதிக்கத்துக்கு எதிராக உண்ணா நோன்பிருந்து உயிர்த்தியாகம் செய்த தியாகதீபம் லெப்கேணல் திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் தமிழர் தாயகம் எங்கும் இன்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகின்றன.

யாழ்.குடாநாட்டில் பிரதான நிகழ்வுகள் நல்லூரில் அமைந்துள்ள தியாகிதிலீபனின் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

யாழ்.மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், ஈகச்சுடரினை

(16ஆம் பக்கம் பார்க்க)

இப்போது 9000/-

தங்க



தேசிய சேமிப்பு வங்கியின் ரன்சஹான அடகுச் சேவையில் இப்போது
ஒரு பவுனுக்கு ரூ.9000/-


- மாதாந்த வட்டி 1.25% • இலகு அடிப்படையில் மீட்டெடுப்பதற்கான வசதி
- துரித சேவை • இரகசியமாக இருக்கும்
- தங்க ஆபரணங்களுக்கு அரச வங்கியின் உத்தரவாதம்
- தங்க ஆபரணங்கள் சுரண்டிப் பார்க்கப்படமாட்டாது
- நாடெங்கிலும் 100 கிளைகள்

NSB

NSB

PHOENIX O&M 0810





'கியூடெக்' அமைப்பின் உதவியுடன் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பௌத்த பிக்குமார் புலிகளின் யாழ். அரசியல்துறைப் பணிமனைக்குச் சென்று கலந்துரையாடுகையில் எடுக்கப்பட்ட படங்கள்.

(படங்கள்: தேவா)

# இனவாத பௌத்த துறவிகள் ஒரு சிலரே; ஏனைய பிக்குமார்கள் அப்படி அல்லர்!

## 46 தேரர்களின் குழு புலிகளிடம் நேற்று எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம்,செப்.15

சமாதான முன்னெடுப்புக்களுக்கு எதிராகத் தென்னிலங்கையில் குரலெழுப்பி வரும் ஒருசில இனவாத பௌத்த பிக்குகளினது கருத்துக்களை ஒட்டுமொத்த பௌத்த பிக்குகளினதும், சிங்கள மக்களினதும் கருத்துக்களாக விடுதலைப் புலிகளோ அல்லது தமிழ் மக்களோ எடுத்துக்கொள்ளக் கூடாது."

- இவ்வாறு புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் மாவட்ட அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் செம்மணனுடனான சந்திப்பில் கருத்துக் கூறினார் வண. கே.யு.பங்கரகரம தேரர்.

பதுளை மாவட்டத்திலிருந்து வண. பிதா டிலக்ஸ் சாந்த பெர்னாண்டோ என்ற கிறிஸ்தவ மதகுரு தலைமையில் 46 பௌத்த பிக்குகள் நேற்று யாழ். வந்தனர்.

கியூடெக் நிறுவனத்தின உதவியுடன் இவர்கள் யாழ் குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளைச் சென்று பார்வையிட்டனர். அத்துடன் நீதி, சமாதான ஆணைக்குழுவினரைச சந்தித்துக் கலந்துரையாடினார்கள். விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத்துக்கு விஜயம் செய்த அவர்கள், அங்கு அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் செம்மணனைச் சந்தித்துக் கருத்துப் பரிமாறினர்.

இந்தச் சந்திப்பில் 46 பிக்குகளினதும் சார்பில் வண. பங்கரகரம தேரர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் இங்கு வந்து இங்குள்ள நிலையை நேரடியாகப் பார்வையிட்டுள்ளோம். உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இந்த மக்களின் பெருமளவு வாழ்விடங்கள் முடக்கப்பட்டுள்ளன. இதனால், மக்கள் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

தென்னிலங்கையில் ஒரு சில இனவாத பௌத்த பிக்குகள் சமாதானத்துக்கு எதிராகக் கூக்குரலிடுகிறார்கள். அவர்களை நாம் கவனத்தில் கொள்வதில்லை. தமிழ் மக்களாகிய நீங்களும் அவர்களைக் கவனத்தில் எடுக்கக்கூடாது.

இது, அவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஓர் அரசியல் தேவை. அவர்கள் மதத்துடன் அரசியலை இணைத்துப் பார்க்கிறார்கள். இந்த நோயை மாற்ற நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

ஆனால், நாம் அவர்களைப் போன்றவர்கள் அல்லர். நாம் முழுமையான சமாதானத்தை விரும்புகின்றவர்கள். தமிழ் மக்களுக்கு ஒரு நிலையான தீர்வு கிடைப்பதையே நாம் விரும்புகின்றோம். அதனையே சிங்கள மக்களும் விரும்புகிறார்கள்.

இந்த மண்ணில் அமைதி ஏற்பட நாம் எம்மாலான அனைத்து உதவிகளையும் வழங்குவோம் - என்றார்.

இந்தச் சந்திப்பில் அரசியல்துறை துணைபொறுப்பாளர் செம்மணன் கருத்துத் தெரிவிக்கையில் -

சிங்கள மக்களுக்கோ அல்லது பௌத்த மதத்துக்கோ எதிரானவர்கள் அல்லர் விடுதலைப் புலிகள்.

தமிழ் மக்களுக்கு ஒரு நிலையான தீர்வு கிடைக்க பௌத்த துறவிகளாகிய நீங்களும் உதவவேண்டும். அதற்குச் சிங்கள பேரினவாத அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

எமது மக்களது முழு ஒத்துழைப்புடனும் பங்களிப்புடனுமே இந்தப் போராட்டம் நடைபெறுகின்றது. ஆரம்ப காலத்திலேயே தமிழ் மக்களுக்கான தீர்வைச் சிங்கள அரசுகள் வழங்கியிருந்தால் நாம் ஆயுதமேந்தவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

எமது மக்கள் இன்று பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றார்கள். உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் மீளக்குடியமர முடியாமல் எத்தனையோ மக்கள் தவிக்கிறார்கள்." எனவே, மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நீங்களும் ஒத்துழைக்கவேண்டும் - என்றார்.

இந்த பௌத்தத் துறவிகள் இன்று கிளிநொச்சியில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்கள். (ஐ-க-8)

### பதுளையில் குண்டுடன் தமிழ் இளைஞர் கைது!

பதுளை நகரில் நேற்று கைக்குண்டு ஒன்றுடன் தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரகசியத் தகவல் ஒன்றையடுத்து பதுளை, கொக்வோவத்தை வீதியில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலைக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த இளைஞரைப் பொலீஸார் சோதனையிட்டனர். அதன்போது அவரிடம் அதிசக்தி வாய்ந்த கைக்குண்டு ஒன்றும், விளையாட்டுக் கைத்துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டன. அவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கணபதி சுந்தரேசன் என்பவரே கைது செய்யப்பட்டவராவார். பதுளை குற்றப் புலனாய்வுத் துறையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-3)

### ஆலயச்சூழலில் தவறவிடப்பட்ட பொருள்கள்

யாழ்ப்பாணம்,செப்.15

நல்லைக்கந்தன் ஆலயத்தின் தேர்த்திருவிழா மற்றும் தீர்த்தோற்சவத்தின்போது ஆலயச்சூழலில் கண்டெடுக்கப்பட்ட பல பொருள்களை அடியார்கள் உற்சவகால சிறப்புச் செயலணி மற்றும் தற்காலிகப் பொலீஸ் நிலையம் என்பவற்றில் ஒப்படைத்துள்ளனர்.

தங்க நகைகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள், மோட்டார் வாகனச்சாவிகள் மற்றும் அடையாள அட்டைகள், கைப்பைகள் என்பனவே அடியார்களால் ஆலயச்சூழலில் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவற்றை உரிய முறையில் ஒப்படைப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை சிறப்புச் செயலணியினரும், பொலீஸாரும் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

### 138 பேர் நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,செப்.15

அரச வேலையில் எழுதுநர் மற்றும் அதனோடு இணைந்த பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றியோரில் யாழ். மாவட்டத்திலிருந்து 138 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்களில் 133 பேர் பொது எழுதுநர் சேவைக்கும் 5 பேர் கணக்குப் பதியுநர் சேவைக்கும் அடங்குகின்றனர். நாடுமுழுவதிலுமிருந்து மொத்தமாக பொது எழுதுநர் சேவைக்கு 2 ஆயிரத்து 481 பேரும் கணக்குப் பதியுநர் சேவைக்கு 107 பேரும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் அனைவருக்குமான நேர்முகப் பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளது. (ஐ-4)

### எழுத்தாக்கல் திறன் தேர்வு விண்ணப்பிக்கக் கோரிக்கை

கிளிநொச்சி,செப்.15

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை, உலக ஆசிரியர் தினத்தையொட்டி, தமிழ்மொழி எழுத்தாக்கத்திறன் தேர்வை எதிர்வரும் 23ஆம் திகதி நடத்தவிருக்கின்றது. இந்தத் தேர்வில் பங்குபற்றும் ஆசிரியர்கள் அனைவரையும் தங்கள் பள்ளி முதல்வர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஊடாகத் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 17ஆம் திகதிக்குமுன் அனுப்புமாறு பேரவையின் செயலாளர் கேட்டுள்ளார். (3)

### நல்லூர் ஆலயச் சூழலில் 3மோ. சைக்கிள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், செப்.15

நல்லூர் ஆலயத் திருவிழாவுக்கு வந்தவர்களுடைய மூன்று மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு யாழ். மாநகர சபைக்கு முன்பாக நிறுத்திப் பூட்டிவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் - நல்லூர் ஆலயத்தின் பின் வீதியில் நிறுத்தி பூட்டி வைக்கப்பட்டிருந்த இரு மோட்டார் சைக்கிள்களுமே திருடப்பட்டுள்ளன என்று முறையிடப்பட்டுள்ளது.

நாவாந்துறை, கடற்கரை வீதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை அஜிரிஸ் சேவியர் ஞானேநதிரன் என்பவருடைய N.P.G.Q 1970 என்ற இலக்கமுடைய மோட்டார் சைக்கிளும் -

கொக்குவிலைச் சேர்ந்த முத்துலிங்கம் ரகுச்சந்திரன் என்பவருடைய N.P.G.P 4440 என்ற இலக்கமுடைய மோட்டார் சைக்கிளும்-

நல்லூர், ராணி வீதியைச் சேர்ந்த முனிச்சாமி ரவிக்குமார் என்பவருடைய 500-6439 என்ற இலக்கமுடைய மோட்டார் சைக்கிளுமே திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக யாழ்.பொலீஸார் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பொலீஸ் நிலையங்களுக்கும் தகவல் கொடுத்துள்ளனர் என்று யாழ்.பொலீஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-7-13)

# புலிகளின் நேர்மையைப் பற்றிப் பேச முன் அரசின் நேர்மையைக் கவனியுங்கள்!

## ஐ.தே.கட்சியின் ராஜித கூறுகிறார்

விடுதலைப் புலிகள் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான பேச்சுக்களின்போது நேர்மையுடன் நடந்துகொள்வார்களா என்று கேள்வி எழுப்புவதை விட்டு நாம் நேர்மையாக நடந்துகொள்கின்றோமா என்பதை முதலில் பார்க்கவேண்டும்.

- இப்படிக் கூறுகிறார் முன்னாள் அமைச்சரும் ஐ.தே.கட்சி எம்.பியுமான ராஜித சேனாரத்ன.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இந்த நாட்டின் பெரும்பான்மைச் சமூகம் தமிழர்களை ஏமாற்றிவிட்டது. அவர்களுக்குத் துரோகம் இழைத்துவிட்டது என்ற கறைபடிந்த வரலாறு மாற்றி அமைக்கப்படல்வேண்டும். சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னர் செல்வா - பண்டா ஒப்பந்தம் கைச்சாத்திட்டபோதும் நாடு இரண்டாகிவிட்டது என கோஷமிட்டனர். ஆனால் இன்று ஏற்பட்டுள்ள நிலை என்ன?

அரசியல் ரீதியாக மேற்கொள்ளவேண்டிய தீர்வுகள் குழப்பியடிக்கப்பட்டால் நாடு இரண்டாகிப்போவதை யாராலும் தடுக்கமுடியாது. விடுதலைப் புலிகள் நேர்மையற்றவர்களாக நடந்துகொள்வார்கள் என்று கட்டியம் கூற முடியாது. முதலில் நாம் நேர்மையானவர்களாக நடந்து காட்டவேண்டும்.

பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆலோசனைச் சபையொன்றை அமைப்பதற்கு எமக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

இது வெறுமனே காலம் கடத்தும் ஒருசெயல என்று தமிழர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாகக்கொண்டு பேச்சுக்கள் நடத்துவதற்கு நாம் பூரண ஆதரவு வழங்குவோம் எனப் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தோம்.

அதைவிடுத்து, ஆலோசனைச்சபை பற்றிக் கதைப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

பேச்சுக்களை நடத்துங்கள்; இறுதி முடிவுடன் நாடாளுமன்றத்துக்கு வாருங்கள். நாம் அந்த முடிவுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குகிறோம் என்று தெரிவித்துள்ளோம்.

நாடாளுமன்றில் ஜே.வி.பியினரை விட இரண்டு மடங்கு பலம் எம்மிடம் இருக்கின்றது. எமது தலைவர் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தாம் தொடர்ந்து கடைப்பிடிக்கப் போகிறார் என ஜனாதிபதி திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றார்.

அரசியலில் சிறுபிள்ளைத்தனமான ஜே.வி.பியினரோ அந்த ஒப்பந்தத்துக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளனர்.

ஒப்பந்தம் பிழையென்றால் நீதிமன்றுககுச் செல்லவேண்டிய தேவையில்லை. அரசின் பிரதான பங்காளிகளாக இருக்கும் ஜே.வி.பியினர் அதைக்கிழித்துவிட்டு புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடலாம்.

இலங்கை வரலாற்றிலேயே தம்மை இடதுசாரிகள் என்று கூறிக்கொண்டு சிறுபிள்ளைத்தனமாக நடந்துகொள்ளும் ஒரே கட்சி ஜே.வி.பி. மட்டுமே என அவர் மேலும் கூறினார். (க-3)

உதயன்

# இது நியாயம்தானா?

யாழ்ப்பாணம் வந்திருந்த புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஹரீம் பீரிஸ் இங்கு தெரிவித்த கருத்துகள் சில குடாநாட்டு மக்களை விசனத்தில் ஆழ்த்தியுள்ளன.

ஹரீம் பீரிஸ், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு மிகவும் நெருக்கமானவர்; வேண்டியவர். அதனால் அதே 'திமிர்'த்தனத்தை யாழ்ப்பாணத்தில் ஹரீம் பீரிஸ் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

குடாநாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணக் கொடுப்பனவுக்கு வெட்டு விழப்போவதை உறுதி செய்திருக்கும் அவர், அதுபற்றிய அறிவிப்பை விடுத்தபோதே 'தடிப்பு'த்தனத்தோடு கருத்துக்கூறியிருக்கின்றார்.

ஏதோ சும்மா சாப்பிட்டுக் 'கொட்டாவி' விட்டுக்கொண்டிருக்கும் குடாநாட்டு மக்களுக்கு உடல் தினவெடுக்கும் வகையில் உணவளிக்கும் விதத்தில் அரசு இலவசமாக நிவாரணத்தை வழங்கி வருகின்றது என்பது போலவும் -

அது வெட்டப்படவிருப்பதாகவும் -

கருத்து வெளியிட்டிருக்கின்றார் அவர்.

"ஒருவருக்குச் சாகும்வரை நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்பது அவசியமில்லை" - என்று கிண்டல் பாணியில் கருத்துக் கூறியிருக்கின்றார் அவர்.

திருவாளர் ஹரீம் பீரிஸ் அவர்களே!

தமிழ்மக்களுக்கு - குறிப்பாகக் குடாநாட்டு மக்களுக்கு - சாப்பிட்டுத் திமிர் முறிப்பதற்காகவோ, தினவெடுப்பதற்காகவோ இந்த அரசினாலும், இதற்கு முந்திய அரசுகளினாலும் நிவாரணம் வழங்கப்படவில்லை.

உங்களின் இதே ஜனாதிபதி சந்திரிகாவின் கீழிருந்த அரசுகளினாலும், ஏனைய பெரும்பான்மைச் சிங்களவரின் பேரினவாதப்போக்குடைய அரசுகளினாலும் 'இராணுவ நடவடிக்கை' என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட கொடூர அழிவுச் செயற்பாடுகளினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு-

தங்களது வீடு வாசல்கள், உடைமைகள், நிலபுலன்கள், சொத்துகளை இழந்து - படை நடவடிக்கைகளால் அவை அழிவுற்ற நிலையில் - அல்லது அவையனைத்தையும் இழந்தநிலையில் - தொழில்கூட இல்லாமல் - ஏதிலிகளாக அகதிமுகாம்களில் தஞ்சம்புகுந்த மக்களுக்கு -

தங்களின் அன்றாட ஜீவனோபாயத்துக்கான வழிவகைகள் கூடப்பறிக்கப்பட்டு பரிதவித்து நிற்கும் மக்களுக்கு -

ஒரு வயிறு கஞ்சி வார்ப்பதற்குத்தான் இந்த நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது; வருகின்றது.

சிங்களப் பேரினவாதக் கொடுமைகளில் இருந்து தப்பி பிழைப்பதற்காக வெளிநாடுகளில் தஞ்சம்புகுந்த தமது உறவினர்கள் அங்கிருந்து கஷ்டப்பட்டு உழைத்து அனுப்பும் பணத்தினால் இங்கு தமிழ்மக்களில் ஒரு பகுதியினர் வயிறார உண்டு, வசதியுடன் வாழ்கிறார்கள் என்பது உண்மையே.

ஆனால், மறுபுறத்தில் ஆயிரக்கணக்கான ஏதிலிகள் வயிற்றைக் கட்டி வாயைக்கட்டி நிவாரண உதவிகளை ஒருவேளை வயிற்றுக்கு உணவாக்கி தமது உயிரைப்பிடித்துத் தக்கவைத்துக்கொண்டு வாழ்கின்றார்கள்.

அவர்களைத்தான் ஏளனத்தோடு பார்த்து 'ஒருவருக்கு சாகும்வரை நிவாரணம் வழங்கவேண்டும் என்பது அவசியமில்லை' - என்று கூறுகின்றீர்கள்.

நிவாரண உதவியை வெட்டி, அவர்களை சாகவிட வேண்டும் என்று நினைக்கிறீர்களா?

யாழ். குடாநாட்டுக்குள்ளேயே தங்களது தாயக மண்ணிலிருந்து உங்கள் அரசின் படையினரால் விரட்டியடிக்கப்பட்டு, தாயகப் பூமியை, சொந்த வீட்டை - நிலபுலன்களை - கண்ணால் பார்த்தே அறியாத ஒரு தலைமுறையே அகதி முகாம்களில் உருவாகி இன்னும் அங்கேயே அன்றாட வாழ்வை ஏதோ உயிரோடு வாழ்கின்றோம் என்ற நிலையில் கழித்துக் கொண்டிருக்கிறது.

அந்த மக்களின் குடியிருப்புக்களை, வீடுகளை, வளங்கொழிக்கும் பயிர்ச்செய்கைக் காணிகளை உங்கள் படைகள் ஆக்கிரமித்து - பறித்து,- இன்னும் நிலைகொண்டிருக்கும்போது -

யாருடைய வீடுகளிலோ, மடங்களிலோ, முகாங்களிலோ குடாநாட்டு மக்கள் தஞ்சம் புகுந்திருக்கின்றனர்.

அந்த மக்களைப் பார்த்துத்தான், ஒருவருக்கு சாகும் வரை நிவாரணம் வழங்கவேண்டும் என்று அவசியமில்லை என்று கொழுப்புத் தனமாக நீங்கள் கூறியிருக்கிறீர்கள்.

அது மட்டுமல்ல, அந்த நிவாரணத்துக்கு வழங்கப்படும் நதியை யாழ்.குடாநாட்டில் பயன்தரக்கூடிய வேறு பல திட்டங்களுக்கு நடைமுறைப்படுத்துவது குறித்துத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் நீங்கள் கதை விட்டிருக்கிறீர்கள்.

தமிழ் மக்களின் நலனுக்காக நீங்கள் செயற்படுத்தும் (?) திட்டங்கள் எத்தகையவை என்பது தமிழ் மக்களுக்குத் தெரியாதா என்ன?

நல்லது பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்குத் தமிழ் மக்களுக்கு பல அவசர அவசிய மனிதாபிமானப் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும். அது உண்மைதான்.

ஆனால், இந்தப் பணியில் உங்கள் அரசின் முகவர்கள் ஈடுபடுவதில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லை. அதைத் தமிழ்மக்கள் கடந்த பொதுத் தேர்தலிலேயே தமது வாக்குகள் மூலம் முரசறைந்து கூறுவது போல வெளிப்படுத்தி விட்டார்கள்.

இதுபோன்ற பணிகளை முன்னெடுப்பதற்காகத் தங்களின் ஏக - அதிகாரபூர்வ - பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை அமைக்கும்படி, ஒன்று திரண்டு வாக்களித்து அவர்கள் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

எனவே முதலில் அதனை செய்வதற்கு வழியைப் பாருங்கள். அதுவரை நிவாரணத்தை வெட்டும் கதையை நிறுத்துங்கள்.

வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீங்கள் வழங்கும் நவராணம் உங்கள் அரசின் வெகுமதியோ, நன்கொடையோ, இனாமோ அல்ல. அது உங்களின் கடமை பொறுப்பு.

உங்கள் அரச படைகள் புரிந்த அழிவு வேலைகளுக்கு நீங்கள் செய்யும் பிராயச்சித்தம் அது என்பதை மறந்து விட்டு, 'திமிர்'ப் பேச்சுப் பேசாதீர்கள்!

கொழும்பில் உள்ள அரசியல் தலைவர்கள் மற்றும் அவர்களின் எடுபிடிகள் போன்று ஆடம்பர வாழ்க்கை நடத்திக்கொண்டு ஏப்பம்விடும் மக்கள் அல்லர் எங்கள் யாழ்ப்பாணத்து மக்கள் - தமிழ் மக்கள். அதிகாரக் கதிரையில் இருந்துவிட்டதால் எதையும் எப்படியும் பேசலாம் என்று எண்ணுவதை நிறுத்திக்கொள்ளுங்கள்!

---

ஜே.வி.பியினருக்கு முகத்தில் அடித்தாற்போல பதில்!

# நிலையான அமைதி ஏற்பட்டாலேயே சர்வதேச நிதி உதவிகள் வழங்கப்படும்

## நாணயநிதிய இலங்கைப் பிரதிநிதி நேரில் விளக்கம்

கொழும்பு,செப்.15

இலங்கையில் நிலையான சமாதானம், அமைதி ஏற்பட்டால் மாத்திரமே சர்வதேச நிதி உதவிகள் இங்கு வழங்கப்படும். யுத்தம் மீண்டும் ஏற்படுமோ என்னும் அச்ச சூழ்நிலையில் அபிவிருத்திப்பணியில் ஈடுபட முடியாது. அது நிச்சயமற்றதன்மை. அந்நிலையில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்லமுடியாது.

இவ்வாறு சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஜரமி காடர் தெரிவித்துள்ளார்.

அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் பிரதிநிநிகள் நேற்று ஜரமி காடரை அவரின் கொழும்பு அலுவலகத்தில் சந்தித்தனர். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் எனக் கூறப்பட்டது.

நிரந்தர சமாதானம் நிலவவேண்டும், அப்படியானால்தான் சர்வதேச நிதியுதவிகள் அபிவிருத்திப்பணிக்கு வந்துசேரும். நிதி வழங்கும் சர்வதேச அமைப்புக்களும் இவ்வாறுதான் கருதுகின்றன - என்றும் ஜரமி காடர் மேலும் ஜே.வி.பியினரிடம் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அடிப்படையிலேயே நிதியுதவிகள் வழங்கவேண்டும். அரசியல் ரீதியாக அல்ல என்று ஜே.வி.பியினர் சர்வதேச நாணய நிதியத்தைக் கேட்டுக் கொண்டனர்.

நாம் அரசியல் ரீதியாக யாருக்கும் நிதி வழங்குவதில்லை, பொருளாதார அபிவிருத்தி எனும் அடிப்படையிலேயே உதவிகள் வழங்குகின்றோம் என்று பதிலளித்தார் ஜரமி காடர்.

ஜே.வி.பியினர் தமது பொருளாதாரக் கொள்கையையும் ஜரமி காடரிடம் எடுத்துக்கூறினர். அதன்போது, தூர்ந்துபோன குளங்களை மீள உயிர்ப்பிக்கும் தமது திட்டத்தையும் முன்வைத்து அதற்கு நிதி கோரினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இத்திட்டம் வினைத்திறன் அற்றது நிதி விரயம் செய்வது என்று சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி சாடியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு கடன் உதவிகளை இலங்கை நாணயமதிப்பில் வழங்கவேண்டும் என்றும் ஜே.வி.பியினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதற்குப் பதிலளித்த நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி சர்வதேச நிதி வழங்கும் சகல நிறுவனங்களும், அமைப்புக்களும் டொலர் பெறுமதியிலேயே வழங்குகின்றன. உலகவங்கி அப்படித்தான் செய்கிறது என்று தெரிவித்துள்ளார்.

நிதி உதவிகள் வழங்கும்போது, விடுதலைப் புலிகளுடன் பேச்சை மீள ஆரம்பிக்கவேண்டும் என்று நிபந்தனை விதிக்கக்கூடாது என்று ஜே.வி.பியினர் சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதியை வேண்டிக்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(க-3)

# தியாகி திலீபனின் நினைவு தினத்தை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்போம்

## தேசிய எழுச்சிப் பேரவை அழைப்பு

யாழ்ப்பாணம்,செப்.15

தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்காகத் தன்னை அர்ப்பணித்தவன் மாவீரன் தியாகி திலீபன். அந்த மாவீரனின் 17ஆவது ஆண்டு நினைவு தினத்தை அனைவரும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்போம்.

- இவ்வாறு தேசிய எழுச்சிப்பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் அழைப்பு விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தாயகம் காத்திட தலைவன் வழியில் நின்று வேள்வியைத் தொடுத்தான் திலீபன். அந்த வேள்வியில் வீழ்ந்து வெந்து சுருண்டது இந்திய தேசம். 17 ஆண்டுகளுக்கு முன் நடந்த இந்தச் சம்பவம் தமிழர் மனங்களில் ஆழமான பதிவை ஏற்படுத்தியது. இந்தியா மீது தமிழர்கள் கொண்டிருந்த நம்பிக்கை அடியோடு சாய்ந்தது என்பது வெளிப்படையாக நிரூபிக்கப்பட்டது. இதனால் தமிழர்கள் புரட்சிக்குள் தள்ளப்பட்டார்கள்.

திலீபனின் அந்தத் தியாக சம்பவம் உலகில் உன்னதமாகப் பார்க்கப்படுகின்றது.

தேசியத் தலைவர் வே.பிரபாகரன் சொன்ன அமுதவாசகம் இது. "போராட்டத்தை வாழ்வியலோடும், வரலாற்றோடும் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று அதனைச் செய்து காட்டியவர் தியாகி திலீபன். மக்களோடு வாழ்ந்த போராளியாகிய அவன் போராட்டத்தில் மக்களையும் இணைத்துக் கொண்டான். அதனால்தான் மக்கள் மனங்களில் என்றும் நிலைத்திருக்கிறார்.

அந்த அற்புத மனிதனின் 17ஆவது நினைவு நாள்கள் இன்று ஆரம்பமாகின்றன. உங்கள் மனங்களில் பதிந்து கிடக்கின்ற அச்சிந்தனையாளனை வெளிக்கொண்டு வாருங்கள். உங்கள் உணர்வெழுச்சியை எல்லோருக்கும் தெரியப் படுத்துங்கள். அந்த செய்தி உலகியலாளர்களின் நெஞ்சங்களை உலுப்பிவிட்டன.

திலீபன் காட்டிய பல அரசியல் சாணக்கியங்கள், அவன் எமக்குக் கற்றுத்தந்த, பெற்றுத்தந்த அரசியல் அடிப்படைகள் நிறைய இருக்கின்றன. ஆதலால் திலீபனின் சிந்தனைகள் ஒவ்வொரு மக்களும் அறியும் வகையில் மகிழ்ச்சியைக் காணத்துடிக்கும் மக்கள் முன் கொண்டு செல்ல தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் உழைக்கவேண்டும்.

உண்ணாநோன்பு தொடங்கிய செப்ரெம்பர் 15ஆம் திகதி காலை 9.55 மணிக்கு நிகழ்வுகள் தொடக்கி வைக்கப்பட்டு 26 ஆம் திகதி நிறைவுபெறும்.

கல்விக் கூடங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், பாடசாலைகள், திணைக்களங்கள், பொது அமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள், வாணிப நிறுவனங்கள், பொது இடங்கள் போன்றவற்றில் நிகழ்வுகள் நடைபெற தேசிய எழுச்சிப் பேரவை ஏற்பாடு செய்துள்ளது. அனைத்துத் துறை சார்ந்த அமைப்புக்களும் தங்கள் தங்கள் இடங்களில் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரித்து, நினைவுப் பந்தல் அமைத்து தியாகி திலீபன் நினைவுத் திருவுருவப் படத்தை வைத்து நிகழ்வுகளை அனுஷ்டிக்குமாறு வேண்டுகிறோம் அதே வேளை தமிழ் மக்கள் தத்தமது வீடுகளில் திலீபனின் திருவுருவப்படத்தை வைத்து வணக்கம் செலுத்தவேண்டும். கோட்ட, பிரதேச ரீதியான நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட ரீதியாக தியாகி திலீபன் உண்ணநோன்பிருந்த நல்லைக் கந்தன் ஆலய வடக்கு வீதியில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில்(செம்ரெம்பர் 15) நிகழ்வுகள் உண்ணாநோன்பு காலை 9.55 இற்கு ஆரம்பமாகும். இறுதிநாள் நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

அதேவேளை தியாகி திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவாக கீழ்க்காணும் செயற்பாடுகளை முன்னேடுப்போம்.

★ வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல், பார்வை குறைநத மாணவருக்கு மூக்குக்கண்ணாடிகள் வழங்கல்

★ இரத்ததானம், சிரமதானம் போன்ற பணிகளை மேற்கொள்ளல்.

★ பாடசாலை கிராமம் தோறும் சுகாதார, சமூக கருத்தரங்குகள் நடத்துதல்,

★ பாடசாலை மட்டத்தில் திலீபன் நினைவுநாள் கட்டுரை, கவிதை, பொது அறிவு தொடர்பான போட்டிகளை நடத்துதல்.

★ மகளிர் பணிக்கான வேலைத் திட்டங்கள், கூட்டுறவாளர் மத்தியிலான போட்டிகள் போன்ற பல்வேறு அம்சங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

- என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8)

# திருத்த வேலைகளுக்காக குறிப்பிட்ட சில பகுதிகளில் மின்வெட்டு

யாழ்ப்பாணம்,செப்.15

சிறிய திருத்தவேலைகளை மேற்கொள்வதற்காக இன்று புதன்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 5 மணி வரை குறிப்பிட்ட சில இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கந்தரோடை, மாகியப் பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர், சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை ஆகிய இடங்களிலிலேயே மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(8-201)

**நாளை**

ஆவணி 31
வியாழக்கிழமை
(16.09.2004)
திதி : துதியை
முன்னிரவு 7.43 வரை
நட்சத்திரம் : அத்தம்
முன்னிரவு 7.05 வரை
சுபநேரம்: 7.33 - 9.03
ராகுகாலம்: 1.33 - 3.03
(பழைய நேரப்படி)

யாழ். நிலைமை குறித்து

# படை அதிகாரிகளுடன் நெதர்லாந்துத் தூதர் ஆராய்வு

யாழ்ப்பாணம்,செப்.15

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள நெதர்லாந்துத்தூதர் சுசான் த பிளாங்கட் அம்மையார் குடாநாட்டுப் பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து படை அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

பலாலி படைத்தளத்தில் யாழ். பாதுகாப்புப் படைத் தளபதிக்குப் பதிலாக பிரிகேடியர் நெண்டி அல்விஸ்டேன் தூதர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

குடாநாட்டின் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாகவும் படையினரின் செயற்பாடுகள் தொடர்பாகவும் தூதருக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

அதன்பின் காங்கேசன்துறை கடற்படைத்தளம், துறைமுகம் ஆகியவற்றிற்கும் அவர் சென்று அங்குள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

தூதுவர் நேற்றுமுன்தினம் முற்பகல் யாழ்.செயலகத்தில் செயலக அதிகாரிகளைச் சந்தித்து உரையாடினார்.

அதன் பின்னர் பிற்பகல் 2.00 மணியளவில் வதிரியில் உள்ள வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் 60 இலட்சம் ரூபா செலவில் நிகொட் நிறுவனத்தினரால் கட்டப்படவுள்ள மாடிக்கட்டடத்திற்கு அடிக்கல்லை நாட்டி வைத்தார். அடுத்து வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தின யுனிவேர்சல் கணனி பயிற்சி நிலையத்திற்கு 5 கணனிகளை தேவஸ்தான அறங்காவலர் சபைத்தலைவர் அன்னலிங்கத்திடம் கையளித்தார்.

இதன் பின்னர் வல்லிபுரக் கோயிலுக்குச் சென்று வழிபட்டார்.

நெதர்லாந்து தூதுவருடன தூதரக முதலாவது செயலாளரும், நிகொட் அமைப்பின் திட்டப்பணிப்பாளர் த.இலங்காநேசன ஆகியோரும் வந்திருந்தனர். வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அடிக்கல் நாட்டும் வைபவம், கணனிகள் வழங்கல் ஆகிய வைபவங்களில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்கேசிவாஜிலிங்கமும் கலந்து கொண்டார்.

(3-173)

**உதயவாக்கு**

புண்ணியம் தேடுவதற்குப் பிறரிடம் அன்பு கொண்டால் போதும்

## நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு
## அளப்பரிய அன்பளிப்புக்கள்

Dialog GSM kit

தொலைபேசி அட்டைகளையும்
(Sim) இணைப்புக்களையும்
வாங்கும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும்
அன்பளிப்புக்கள்
17ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
விவரங்களுக்கு:

எந்நேரமும் உன்னுடன்...

**Sri Murugan**
**TeleCommunication & Agency Post Office,**
303, K.K.S. Road, Jaffna.
(சி-37663) (26-12) T.P.No.: 021-222-5392.


## கருத்தரங்கு

கைதடி,செப்.15

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் கடந்த சனிக்கிழமை கைதடி கலைநகர் ஜான் பாலர் முன்பள்ளியில் எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது.

கைதடி வளர்மதி சனசமூக நிலைய உப தலைவரும் சமுர்த்தி உத்தியோகத்தருமாகிய கி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் எயிட்ஸ் நோயின், தாக்கம் பற்றி அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள் கருத்துரை வழங்கினார்கள்.

கைதடியின் பல பகுதிகளிலும் இப்படியான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளைக் கடந்த சிலவாரங்களாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்திவருகிறது. (10-75)

## கலைப்பீட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இன்றுமுதல்!

யாழ்ப்பாணம்,செப்.15

பெறுமான மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்ட கலைப்பீடத்தின் புதிய கறகைநெறி அமைபபுமுறை பற்றிய கருத்தரங்கு ஒன்று இன்றுமுதல் மூன்று தினங்கள் முற்பகல் 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கலைப்பீடத்தைச் சேர்ந்த சமயதுறை ஆசிரியர்களுக்காக நடத்தப்படும் இக்கருததரங்கு மெய்யியற்றுறைப் பேராசிரியர் என்.ஞானகுமரன், பொருளியற்றுறைப் பேராசிரியர் வி.பி. சிவநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் இடம்பெறும் என்று கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்தார். (3)

## செயற்கைமுறைச் சினைப்படுத்தலில் இரண்டு கன்றுகள்

செயற்கைமுறை சினைப்படுத்தலின் மூலம் சினைப்படுத்தப்பட்ட பசு, இரண்டு கன்றுக் குட்டிகளை ஈன்றுள்ளது.

கட்டப்பிராய், கோயிலாக்கண்டியைச் சேர்ந்த எஸ்.மகேசன் என்பவரது பசுவே இரண்டு கன்றுக் குட்டிகளை ஈன்றுள்ளது.

இதில் ஒன்று பசு. இரண்டு கன்றுக் குட்டிகளும் தாய்ப்பசுவும் நலமாக இருப்பதாக கோபபாய் கால்நடை வைத்தியர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பசுமாடு இரட்டைக்கன்றுக்குட்டிகளை ஈனுவது மிக அரிதாகவே நடைபெறுவதாகவும் அதுவும் செயற்கை முறைச் சினைப்படுத்தல் மூலமே நடைபெறுவதாகவும் கூறப்படுகின்றது. (10-11)

## சேவை நலன் பாராட்டு





**திருமதி ஈஸ்வரி லக்ஸ்மணன்**
ஆசிரியை வகுப்பு 1
சேவைக்காலம் - (1968 - 2004)

**திரு. சு.கந்தசாமி**
அலுவலக ஊழியர்
சேவைக்காலம் - (1978 - 2004)

நீண்ட காலமாக எமது பாடசாலையில் நிறைவான சேவையாற்றி பாடசாலை வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய மதிப்பிற்குரிய ஆசிரியர், ஊழியர் ஆகியோர் ஓய்வுபெறும் இவ்வேளையில் எம் உள்ளங் கனிந்த பாராட்டுக்களை அவர்களுக்கு உரித்தாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர், ஊழியர்
யா/புற்றளை மகாவித்தியாலயம்.
(36419(26-12)

## இலவசப் பயிற்சி நெறி

**இலவச தொழிற்பயிற்சிகள் ஆரம்பம்: 22-09-2004**
மின் இணைப்பு, ஆண், பெண் தையல் பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ★ வீட்டு மின்இணைப்பு ஆண் தையல் பயிற்சி என்பன தொழில் செய்யும் ஆண்களுக்கான வசதியை முன்னிட்டு இரவு வகுப்புகளாக நடத்தப்படும்.
- ★ பெண்களுக்கான தையல் பயிற்சி பகலில் நடைபெறும்.
- ★ விண்ணப்ப முடிவு திகதி: 19.09.2004
- ★ சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை பின்வரும் முகவரியில் சேர்ப்பிக்கவும்.

**JRS தொழிற்பயிற்சி நிறுவனம்**
புனித அல்போன்ஸ் லிகோரியார் ஆலயம்,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.
(36418)(42-12-26)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

ஜனனம் 16 - 01 - 1920



சங்கமம் 17 - 08 - 2004

**திருமதி மங்கையர்க்கரசி நடராசா**

*இல்லத்தின் ஒளியாய் உள்ளத்தின் விளக்காய் நிறைந்தவளே*
*வாழ்க்கை வெள்ளத்தில் ஓடமாய் திகழ்ந்திட்டாயே*
*திக்கெட்டும் வெண்திங்களாய் மலர்ந்திட்டாயே*
*பூதலத்தை விடுத்து சுவர்க்க உலகுகாண சென்றிட்டாயோ?*

நாளை (16.09.2004) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*76, பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில், யாழ்ப்பாணம்.*
- குடும்பத்தினர்.
(36421)(42-12-26)

## நீங்காத நினைவில் நாலாவது ஆண்டு

தோற்றம் 12 - 06 - 1903



மறைவு 28 - 08 - 2000

திருமதி
**பொன்னப்பா இராசம்மா**
திதி: அமாவாசை 15.09.2004 (புதன்கிழமை)

தந்தையாகத் தாயாகி எம்மை வளர்த்தீர்கள்
தவம் இருந்து மூன்று தெய்வங்களை
பெற்று எடுத்து தாரணையிலே வையத்துள்
வாழ்வாங்கு வாழவைத்தீர்கள் எங்கள்
அன்புத் தெய்வமே நீங்கள் மறைந்து இன்று
நாலு ஆண்டுகள் ஆகிவிட்டதே ஆனாலும்
அம்மா எங்கள் மனம் ஆறவில்லை. எங்கள்
துயரம் தீர்க்க யாரும் இல்லை அம்மா நீங்கள்
வணங்கிய தெய்வங்கள் கல்வியங்காட்டு
வீரபத்திரர், இலங்கநாயகி மனோன்மணி அம்மன்,
நல்லூர்க் கந்தன் ஆகிய மூன்று தெய்வங்களும்தான்
துணை அம்மா. உங்களை கூடிய கெதியில் வந்து சரண் அடைவோம் அம்மா. உங்களை அன்றும் இன்றும் நினைவுடன் வாழ்கிறோம் அம்மா.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*இல. 4, செட்டித்தெரு,*
*நல்லூர்.*
(சி-37665) (24-12-26)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


## விற்பனைக்கு

227 - XXXX தொடர் இலக்கமுடைய
ELF 250 (அலுமினிய பொடி),
42 - XXXX தொடர் இலக்கமுடைய
ELF - 350 (மரபொடி)
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777 - 286204.
(சி-37668)


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

அமரர் **தம்பு தேவராசா**

எமது பாடசாலையின்
சக ஆசிரியை
திருமதி ஜெ.அருள்தாசனின் தந்தை
தம்பு தேவராசா
அவர்கள் 16.08.2004இல் இயற்கை எய்தியமையையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியையும் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர்கள், ஊழியர்கள்.
யா/திருக்குடும்பக் கன்னியர்மடம்,
யாழ்ப்பாணம்.
(24-12-26) (36423)


## பணியாளர் வெற்றிடம்
## பெண்கள்

அங்கீகரிக்கப்பட்ட தளபாட உற்பத்தி
நிறுவனமொன்றிற்கு கீழ்வரும்
பணியாளர் தேவை.

1. அலுவலக உத்தியோகத்தர்
2. களஞ்சியக் காப்பாளர்
3. காட்சியறை விற்பனையாளர்

வயதெல்லை: 20-40 வரை.
நேர்முகத்தேர்வு:17.09.2004 வெள்ளிக்கிழமை
காலை 9.30மணி.

தலைமை அலுவலகம்:
Equip Unit Trust,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
T.P.:0712 873387.

காட்சி அறை:
E.U.T.
இல.57, K.K.S.வீதி,
சுன்னாகம்.
(36424)(42)


## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**ஆறுமுகம் தம்பையா**
(B.Sc.)
(இளைப்பாறிய உப அதிபர்)

அன்பு அப்பா,
*கடல் கடந்து அமுதம் கொண்டு*
*கலசத்தை நிறைத்தாற் போல்*
*உடல் உருகி வாய்திறந்து*
*மடுத்து உங்களை நினைத்துக்*
*கொண்டோம்.*

தோற்றம் 12-07-1936
மறைவு 15-09-1997

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:*
- குடும்பத்தினர்.

*கொற்றாவத்தை,*
*வல்வெட்டித்துறை.*
(36406)(42-12-26)

## மரண அறிவித்தல்

திருமதி
**சின்னத்தங்கைச்சி சிவசுப்பிரமணியம்**

உடையளவு, இடைக்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னத்தங்கைச்சி (இராசம்) சிவசுப்பிரமணியம் 14.09.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வடிவேலு சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வீரசிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற வடிவேலு - பொன்னம்மா தம்பதியினரின் மருமகளும் சுஜாகரன் (சுவிஸ்), பாஸ்கரன் (சுவிஸ்), கவிதா (ஜேர்மனி), மனோகரன் (சுவிஸ்), விஜிதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவாஜினி (சுவிஸ்), சிவராஜினி (சுவிஸ்), ஞானசேகரம் (ஜேர்மனி), காண்டீபன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருஷான், கிருபிகா, செந்தூரா, திவ்யா, விதுன் ஆகியோரின் பேர்த்தியும் யோகமங்களம் (Euro Lanka, கொழும்பு), இராசமணி, தங்கமலர், சிவமனோகரி, விக்கினேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பராசக்திராசா (Euro Lanka, கொழும்பு), ஸ்ரீசச்சியானந்தன் (சுவிஸ்), வைத்தீஸ்வரன், கிருஷ்ணமூர்த்தி, கருணாகரன், கமலநாதன், தெய்வலட்சுமி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் திரியன் (ஆஸ்திரேலியா), கீதா, ரஜீதன் ஆகியோரின் பெரியம்மாவும் யதுஷாவின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2004) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று, இடைக்காடு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*H½, வேலுவன அராமய தொடர்மாடி,*
*வெள்ளவத்தை.*
(C/37664)(42-12-26)

தகவல்:
வ.பராசக்திராசா.

# மாகாண மட்டத்தில் நடைபெற்ற எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.15

2004ஆம் ஆண்டுக்கான மாகாணமட்டத்திலான தமிழ் மொழித் திறன் விருத்தி எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுள்ள மாணவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் எதிர்வரும் 19ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெறவுள்ள தமிழ்மொழித்தின விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளன.

அன்றைய தினம் சமுகமளித்துப் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுமாறு தமிழ்மொழிக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.அனந்தராஜ் கேட்டுள்ளார்.

அன்றையதினம் பரிசில்களைப் பெறமுடியாதவர்களின் பரிசில்கள் அந்தந்தப் பாடசாலை அதிபர்களுக்குப் பின்னர் அனுப்பப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தப் போட்டியில் முதல் இடம்பெற்ற மாணவர்களைத் தேசியநிலைப் போட்டிகளில் பங்குபற்றத் தயாராக இருக்கும்படியும் அவர் கேட்டுள்ளார்.

### ஆக்கம் - எழுத்து - பிரிவு 1

முதலாம் இடம்: த.அபிநயா (சாவகச்சேரி ஆரம்பப் பாடசாலை), 2ஆம் இடம்: க.பா.பஸ்லீனா (தி/அல்-பத்தா மு.வித்தி.), 3ஆம் இடம்: சீ.வினோஜா (மட்/குமார கபாலியர் கிராமம் வி.).

### கட்டுரை - வரைதல் - கடிதம் எழுதுதல் பிரிவு 2

முதலாம் இடம்: எச்.இஸ்ஸத் சமீஹா (கமு/ஆயிஷா பெ.ம.வி.), 2ஆம் இடம்: த.கோபிகா (கிளி/முருகானந்தா ம.வி.), 3ஆம் இடம்: ஏ.எம்.பாத்திமா முபாஸியா (மட்/ஓட்டமாவடி பாத்திமா ம.ம.வி.).

### கட்டுரை வரைதல் - கடிதம் எழுதுதல் பிரிவு 3

முதலாம் இடம்: பா.ஜசிந்தா (யா/வேம்படி மகளிர் கல்லூரி), 2ஆம் இடம்: ந.பவித்ரா (கிளி/புனித திரேசா ம.வி.), 3ஆம் இடம்: ர.ஆரணி (தி/சென். மேரிஸ் கல்லூரி).

### கட்டுரை வரைதல் - இலக்கியம் நயத்தல் பிரிவு 4

முதலாம் இடம்: வா.தர்மிஷா (யூனியன் கல்லூரி), 2ஆம் இடம்: மு.ச.பாத்திமா சித்திக்கா (கமு/அல்-மஸ்கர் பெ.உ.பாட.), 3ஆம் இடம்: மு.நி.அ.பாத்திமா பர்ஹத் (மட்/மில்லத் மகளிர் ம.வி.).

### தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல் பிரிவு 5

முதலாம் இடம்: த.சசிரேகா (மட்/மகாஜனாக் கல்லூரி), 2ஆம் இடம்: யு.எல்.றிஷானா (கமு/அல்-மர்ஜான் மு.மகளிர் கல்லூரி), 3ஆம் இடம்: செல்வி ந.துகிர்தா (கிளி/கிளிநொச்சி ம.வி., கிளிநொச்சி).

### இலக்கணப் போட்டி பிரிவு 4

முதலாம் இடம்: ஆ.பா.பாத்திமா றிபானா (மட்/மீரா மகளிர் ம.வித்தி.), 2ஆம் இடம்: த.சிறி ரஜீவன் (கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி), 3ஆம் இடம்: அ.அன்ரனறீ நிரோஜினி (ம/முல்லைத்தீவு ம.வி.)

### இலக்கணப் போட்டி பிரிவு 5

முதலாம் இடம்: தி.காயத்திரி (மகாஜனாக் கல்லூரி), 2ஆம் இடம்: மு.ச.றினோஸா (கமு/சம்ஸ் மத்திய கல்லூரி), 3ஆம் இடம்: ஆ.பிரதீபன் (மட்/கிரான்குளம் விநாயகர் ம.வி.).

### திறனாய்வுப் போட்டி பிரிவு 5

முதலாம் இடம்: வி.மயூரதாஸ் (புற்றளை ம.வி.), 2ஆம் இடம்: எம்.முசாதிக் (கமு/அட்டாளைச்சேனை மு.மத்திய கல்லூரி), 3ஆம் இடம்: எம்.இர்பானா (தி/அந்-நகார் மு.மகா வி.).

### குறுநாடக ஆக்கம் பிரிவு 4

முதலாம் இடம்: வே.சுபிதா (கிளி/நாகேஸ்வரா வித்தி.), 2ஆம் இடம்: சௌ.கபிலா (கொழும்புத்துறை இந்து ம.வி.), 3ஆம் இடம்: ய.முகம்மது முபாசிர் (கமு/அல்-மதிணா ம.வி.)

### குறுநாடக ஆக்கம் பிரிவு 5

முதலாம் இடம்: கு.அறிவழகன் (மல்லாகம் ம.வி.), 2ஆம் இடம்: ஷ.நூர்ஜஹான் (தி/அல்-மின் ஹாஜ் மு.வித்தி.), 3ஆம் இடம்: கா.கஜிகரன் (வ/புதுக்குளம் ம.வி.).

### கவிதை ஆக்கம் பிரிவு 4

முதலாம் இடம்: அ.அனுஷானி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), 2ஆம் இடம்: எஸ்.ஸ்ரனி கிஷோகர் (மன்/புனித சவேரியார் ஆ.கல்.), 3ஆம் இடம்: த.நிதர்சன் (தி/இ.கி.மி.ச. ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி).

### கவிதை ஆக்கம் பிரிவு 5

முதலாம் இடம்: மு.றசீத் ஜுஸ்லா (மட்/மீரா மகளிர் ம.வி.), 2ஆம் இடம்: அ.ஜெ.டெனிசியஸ் (மு/வித்தியானந்தா கல்லூரி), 3ஆம் இடம்: கி.சிவரூபன் (மட்டுவில் சந்திரபுர ம.வித்தி.).

### சிறுகதை ஆக்கம் பிரிவு 4

முதலாம் இடம்: மு.கேதுஜா (கமு/விபுலானந்தா மத்திய கல்லூரி), 2ஆம் இடம்: கி.சிவபிரசாந்த் (தி/ஸ்ரீ கோணேஸ்வரா இ.கல்.), 3ஆம் இடம்: நா.நிருபா (வ/சைவப்பிரகாச மகளிர் ம.வி.

### சிறுகதை ஆக்கம் பிரிவு 5

முதலாம் இடம்: ரா.ப.அரூஸ் (தி/கிண்ணியா மத்திய கல்லூரி), 2ஆம் இடம்: யோ.ரிஷிகா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), 3ஆம் இடம்: க.லோககீதா சைவப்பிரகாச மகளிர் ம.வி.). (எ-3)

# சூட்டுக்காயத்துடன் இளைஞன் ஆஸ்பத்திரியில் அனுமதி

மட்டக்களப்பு,செப்.15

சூட்டுக்காயங்களுடன் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வலது காலில் சூட்டுக்காயங்கள் உள்ளன. காயங்கள் பாரதூரமானவை. இவரை வைத்தியசாலையில் சேர்த்தவர்கள் யார் என்று தெரியவில்லை என வைத்தியசாலை பொலீஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டபின் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிககப்படுகிறது. இந்த இளைஞனின் பெயர் ஈழப்பிரியன் என்று வைத்தியசாலைப் பதிவேட்டில் உள்ளது. வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் மதியம் 12 மணியளவில் சேர்க்கப்பட்ட இந்த இளைஞனுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (க-3)

# இலங்கையின் பாதுகாப்புக்கு இந்தியா ஒத்துழைப்பு நல்கும்

## அந்நாட்டுக் கடற்படை அதிகாரி வாக்குறுதி

கொழும்பு,செப்.15

இலங்கையின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இந்தியா பூரண ஒத்துழைப்பு வழங்குமென, இலங்கைக்கு வந்துள்ள இந்தியக் கடற்படையின் சிரேஷ்ட அதிகாரி அட்மிரல் அருண் பிரகாஷ் தெரிவித்தார்.

இலங்கைக் கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரியை அவர் சந்தித்தபோதே இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்தியக் கடற்படையின் சிரேஷ்ட அதிகாரியை வரவேற்பதற்காக நேற்றுமுன்தினம் கடற்படைத்தலைமையகத்தில் வைபவம் ஒன்று இடம்பெற்றது.

இந்தியக் கடற்படைத் தளபதிக்கு அங்கு வைத்து அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. அதன்பின் இருதளபதிகளும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது இலங்கைக் கடற்படைக்குப் பயிற்சி வழங்குவது உட்படப் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இந்தியக் கடற்படைத் தளபதிக்கு நினைவுப்பரிசு ஒன்றும் வழங்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை பதில் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சூல சென்விரத்னவையும் பின்னர் ஜனாதிபதியையும் இந்தியக் கடற்படையின் சிரேஷ்ட அதிகாரி சந்திக்க ஏற்பாடாகி இருந்தது. (ஐ-க)

# நல்ல மருந்து

இராகம்: மோகனம் தாளம்: ரூபகம்



நல்ல மருந்தொரு குருமருந்தை நான்
நல்லூரிற் கண்டேனே (நல்ல...)

எல்லையில் லாப்பிணி தீர்க்கு மருந்து
இம்மை மறுமைக்கு மேற்ற மருந்து
இல்லை யெனாது கொடுக்கும் மருந்து
ஏழை யடியார்க் கிரங்கு மருந்து (நல்ல...)

வல்லவன் செல்லப்பன் தந்த மருந்து
வாழ்த்தும் கணபதிக்கு வந்த மருந்து
புல்லர்கள் கண்டும் புசியா மருந்து
புண்ணியர் யோகர் புசிக்கு மருந்து (நல்ல...)

- யோகர்சுவாமிகள்.

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,செப்.15

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டிக் கம்பன் கழகம் கழக மண்டபத்தில் நடத்திவரும் நிகழ்வுகளில் இன்று இரவு 7.30 மணிக்கு செல்வி ரோகினி மருதவாணரின் மாணவர்கள் வழங்கும் நாட்டியாஞ்சலி இடம்பெறவுள்ளது. (3-201)

✦✦✦

யாழ்ப்பாணம்,செப்.15

நல்லூர்க் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி நல்லூர் மேற்கு வீதியிலுள்ள ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலய மண்டப அரங்கில் தினமும் மாலை 6 மணிக்கு நடைபெற்று வரும் கம்பராமாயணத் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் பூங்காவனத் திருவிழாவான இன்று சி.வை.நித்தியானந்தசர்மா 'ஸ்ரீ ராம் பட்டாபிஷேகம்' பற்றி உரையாற்றுவார். (3-201)

✦✦✦

யாழ்ப்பாணம்,செப்.15

நல்லூர்க் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இந்து கலாசார திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம், நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வுகளில் இன்று மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் தலைமையில் கவியரங்கம் இடம்பெறவுள்ளது. (3-201)

✦✦✦

யாழ்ப்பாணம்,செப்.15

நல்லூர்க் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றத்தினர், நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் பூங்காவனத் திருவிழாவான இன்று என்.செல்வச்சந்திரனின் இசைநெறியாள்கையில் 'ஆறுமுகமான பொருள்" என்ற தலைப்பில் இசையரங்கு இடம்பெறும்.

நிகழ்வில் ரி.பிரதீபன், எஸ்.நிரோஜன், கே.கருணைச்செல்வி ஆகியோர் பாடகர்களாகக் கலந்துகொள்வர்.

பக்கவாத்தியக்காரர்களாக கீபோட் - என்.செல்வச் சந்திரன், வயலின் - ஏ.ஜெயராமன், கிற்றார் - கே.சகாதேவன், மிருதங்கம் - எஸ்.துரைராசா, தபேலா - எஸ்.விமல்சங்கர், ப்பாட் - ஏ.கேதீஸ் ஆகியோர் பங்கேற்கின்றனர். (3-201)

# நல்லூர்க்கந்தன்

## பெருந்திருவிழாக் காலச் சிறப்பிதழ்

### பூங்காவனத் திருவிழா



## பேச்சுத் துலங்கிட வழி செய்வாயே!

கடலென மக்கள் வெள்ளம்
கரைபுரண்டலை போல் மோத
சுடர் ஒளிவேலா உன்முன்
சூழ்ந்தனர் அடியார் எல்லாம்
மடமயில் இருவர் ஆன
வள்ளி தெய்வானை ஒடு
விடயவன் உமையாள் பாகன்
விண்ணவர் புடை சூழவந்து
கடந்த இருபத்தைந்து நாளாய்
காட்சிகண்டு உவகை உற்றார்
இடர்பட எம்மை விட்டிங்கு
இன்ப பள்ளியறை செல்லலாமோ
உடன் எமது ஆட்சியாளர்
உள்ளத்தை நெகிழ வைத்து
தொடர்ந்திட சமாதானப் பேச்சு
துலங்கிட வழி செய்வாயே!

- விகடகவி.

## துணை நின்று பகைவென்று அருளவேண்டும்

நல்லைக் கந்தன் நற்றாழ் பணிந்து
நாளுந் தொழுதுவரத் தொல்வினைகள் நீங்கும்
நல்லவினைகள் யாவும் நம்மைவந்து சேரும்
நானிலத்தோர் வாழ்வு சிறந்து விளங்குங்காண்

வள்ளி தெய்வானையுடன் வடிவேலழகன்
புள்ளி மயிலமர்ந்து புனிதவேல் தாங்கி ~ வரம்
அள்ளித் தரும் பூங்காவனத் திருக்கோலம்
காணும் அடியார்கள் உள்ளம் உருகுங்காண்

தேவர் குறைகழையச் சூரனை வதம் செய்த
தோகை மயில் வேலா நம் தமிழர் சுதந்திரமாய்
தன்னாட்சி அதிகாரம் பெற்றிங்கு வாழ்வதற்கு
துணை நின்று பகை வென்று அருள வேண்டும்.

- மட்டுவிலூர் த.அப்புத்துரை.

## கல்யாணக் கந்தன்

இச்சா சக்தி யெனும்
இதமான குற மகளை
இச்சை யுடன் களவால்
இணைந்திட்ட எம் முருகன்
தெவ்வ யானை யெனும்
கிரியா சக்தி தனை
கற்புத் திரு மணத்தால்
கைப்பிடித்த கடம்ப னவன்
கால மெலாம் கீக்கும்
கல்யாணக் கந்த வள்ளல்
கோலம் சிறந் தோங்க
கொடுமை தனைக் களைவான்!

- கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்.

## ஆட்கொள்ள வருவதெப்போ...?

*மணக்கோலம் காண்கின்றாய் மன்னவனே! – எங்களது*
*மனக்கோலம் கண்டெமக்கு உறுதுணையாய் வருவதெப்போ...?*
*பிணக்கெல்லாம் தீர்த்து வைத்தாய் தேவியர்கள் இருவரிடம்*
*பிளவான எம் வாழ்வை ஒன்றாகச் சேர்ப்பதெப்போ...?*
*தினைப்புலத்தில் வள்ளி மனம் கொள்ளையிடப் போனவனே!*
*தீர்வாகி வந்தெங்கள் தீ ஆற்றிக் குளிர்வதெப்போ...?*
*அனைத்துக்கும் காரணனாய் அமர்ந்தவனே! அற்புதனே!*
*அல்லல் தொலைத்து எமை ஆட்கொள்ள வருவதெப்போ...?*
*பூங்காவனமின்று புன்னகையில் பூத்தவனே!*
*பூவின் தேன்துளியாய் எம் வாழ்வைச் செய்வதெப்போ...?*
*தாங்காத் துயர்களையும் தாங்கிவரச் செய்தவனே!*
*தண்ணருளைத் தந்து உண்மை சொல்லிவிடும் நாளுமெப்போ...?*

- தாட்சாயணி.

## வாழ அருள்வாயே!

பரமதை ஆன்மா பற்றிடும் நாளாம்
பரமன் மகனவன் மணக்கோலம்
உணர்த்திடும் நாளாம் சீர்மேவு
உத்தமர் வாழ் பதியுறையும்
சுந்தரத் திருமுருகனே உன் நாமம்
சுகந்தமாய் வீசிடும் பதியோனே
இன்னலதை நீயும் நீக்கியே எமை
இங்கிதமாய் வாழ அருள்வாயே!

- சி.பத்மராஜா.

# வைத்தியசேவை இடமாற்றம்

## CENTRAL CLINIC சென்றல் கிளினிக்

18/3 வைமன் வீதி, நல்லூரில் இயங்கி வந்த சென்றல் கிளினிக் 40/3 வைமன் வீதி, நல்லூரில் (முன்னைய இடத்தில் இருந்து வடக்குத்திசையில் 100 மீற்.தொலைவில்) இன்று புதன்கிழமை (15.09.04) தொடக்கம் மேலும் விஸ்தரிக்கப்பட்ட நிலையில் இயங்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

☞ பொதுவைத்தியம் ☞ குழந்தை வைத்தியம் ☞ பெண்நோயியல் ☞ கர்ப்பிணி சிகிச்சை
☞ தோல்வைத்தியம் ☞ சிறு சத்திரசிகிச்சை
☞ ஆஸ்துமா நோயாளிகளுக்கான நெபுலைசர் (Nebuliser) பிடித்தல் என்பன
**MBBS** வைத்தியர்களால் நடத்தப்படும்.

**விசேட பரிசோதனை:**
- இரத்த குளுக்கோசு பரிசோதனை (Blood Glucose Test)
- சல குளுக்கோசு பரிசோதனை
- கர்ப்பிணி பரிசோதனை

◆ சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான (Driving Licence), மருத்துவ சான்றிதழ் (MC) வழங்கப்படும்.

நோயாளர்களைப் பார்வையிடும் நேரம் தினமும்

காலை **6.30 – 7.45** (மு.நே) மாலை **4.30 – 8.00** (பி.நே).

(36390) (42-21-13)



# வங்கியில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான வங்கியியல் கற்கைநெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

## ACBF, CBF

அடிப்படைத் தகைமைகள்
G.C.E. (A/L) 2 Passes and G.C.E. (O/L) 6 Passes with 5 Credits including
Maths/Commerce & Accounts and Language (Tamil/English)

விண்ணப்ப முடிவுதிகதி: 25-09-2004
விரிவுரைகள் ஆரம்பம்: 02-10-2004 (26-21-13)

INQUIRIES/REGISTRATION
DIRECTOR,
**JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT.**
464, Hospital Road, Jaffna. (சி-37559)


# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## சுகாதார சேவைகள் பிரிவு - யாழ்ப்பாணம்

## பால் தவிர்ந்த சமைத்த/உலர் உணவு வழங்கல்-2005

2005 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்த/உலர்உணவு வழங்குவதற்கான கேள்விகள் 2004-11-05ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பெற்று முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் பெறவிரும்புவோர் தமது பெறுமதிச் சான்றிதழும் (Worth Report) எம்மால் குறிப்பிடப்படும் தொகைக்கு ஏற்ப உத்தரவாத முறியும் (Bid Bond) சமர்ப்பித்து கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 100 உம் அட்டவணையில் காட்டப்பட்ட மீளளிப்புடனான கேள்விக் கட்டுப் பணமும் செலுத்தி 2004-11-04 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 15.00 மணிவரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

விவரங்கள் பின்வருமாறு:

### அ) உலர் உணவு வழங்குவதற்கான வைத்தியசாலைகள்.

| நிறுவனங்கள் | கேள்விப் பிணை | உத்தரவாதமுறி | பெறுமதிச் சான்றிதழ் |
|---|---|---|---|
| ஆ.வை.பருத்தித்துறை | 3000/- | 93000/- | 30000/- |
| மா.வை.வல்வெட்டித்துறை | 2000/- | 78000/- | 20000/- |
| மா.வை.தெல்லிப்பழை | 2000/- | 84000/- | 20000/- |
| மா.வை.நெடுந்தீவு | 2000/- | 21000/- | 20000/- |
| மா.வை.ஊர்காவற்றுறை | 2000/- | 29000/- | 20000/- |
| மா.வை.சாவகச்சேரி | 2000/- | 42000/- | 20000/- |
| சு.கூறு.கோப்பாய் | 2000/- | 46000/- | 15000/- |
| சு.கூறு.சங்கானை | 2000/- | 28000/- | 15000/- |

### ஆ) சமைத்த உணவு வழங்குவதற்கான வைத்தியசாலைகள்

| நிறுவனங்கள் | கேள்விப் பிணை | உத்தரவாதமுறி | பெறுமதிச் சான்றிதழ் |
|---|---|---|---|
| சு.கூறு அச்சுவேலி | 2000/- | 27000/- | 15000/- |
| சு.கூறு அனலைதீவு | 1500/- | 11000/- | 15000/- |
| சு.கூறு காரைநகர் | 1500/- | 15000/- | 15000/- |
| சு.கூறு நயினாதீவு | 1500/- | 15000/- | 15000/- |
| கி.வை வேலணை | 1500/- | 12000/- | 15000/- |
| கி.வை வட்டுக்கோட்டை | 1500/- | 10000/- | 15000/- |
| கி.வை மருதங்கேணி | 1500/- | 7000/- | 15000/- |
| ம.ம.ம.ம.கரவெட்டி | 1000/- | 10000/- | 15000/- |
| ம.ம.ம.ம.வரணி | 1000/- | 8000/- | 15000/- |
| ம.ம.ம.ம.மானிப்பாய் | 1000/- | 5000/- | 15000/- |
| ம.ம.ம.ம.கோண்டாவில் | 1000/- | 8000/- | 15000/- |
| ம.ம.ம.ம.கொடிகாமம் | 1000/- | 8000/- | 15000/- |

கேள்விகள் இணைப்பிரதிகளில் மூலப்பிரதி தனியாகவும் இணைப்பிரதி தனியாகவும் மெழுகு முத்திரை இடப்பட்ட உறைகளில் இட்டு கேள்வி விவரம் எழுதப்பட்டு இப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விகள் தபாலில் இடப்படின் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பேற்கமாட்டாது. நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மேலாகச் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேலதிக விவரங்களை இப்பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளமுடியும். கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விகாரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்துகொள்ளமுடியும்.

**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம்
பிரதி மாகாணப் பணிப்பாளர். சுகாதாரசேவைகள். யாழ்ப்பாணம். (சி37650)(34)

## இராணுவ வாகனச் சாரதி மீது வழக்கு

தென்மராட்சி,செப்.15

மூன்று மாதங்களுக்கு முன்னர் மட்டுவில் பகுதியில் வீதியில சென்றவரை மோதிக் காயப்படுத்தி விட்டு தப்பியோடிய இராணுவ வாகனத்தின் சாரதியை தேடிப் பிடித்து சாவகச்சேரி பொலீஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

சமரசிங்க முதியான சலாகேகுண திலக பண்டா என்னும் சாரதி மீது சாவகச்சேரி பொலீஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

சந்தேக நபர் நீதிமன்றில் சமுகமளிக்காததால் வழக்கினை நவம்பர் மூன்றாம் திகதி வரை நீதிவான் ஒத்திவைத்தார். (ஐ-117)

## சிறுமியைப் பாம்பு தீண்டியது

தென்மராட்சி,செப்.15

இயற்கைக் கடன் கழிக்கச் சென்ற ஏழு வயதுச் சிறுமி பாம்பினால் கடியுண்டார்.

கடந்த ஞாயிறு இரவு தென்மராட்சி பாலாவி வடக்கில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சண்முகநாதன் சங்கீதா (வயது 7) என்பவரே பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-117)

## செயலமர்வு

தென்மராட்சி,செப்.15

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன உதவியுடன் தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பது தொடர்பாகப் பிரதேச திணைக்களத் தலைவர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (3-117)

## பெருமாள் கோவிலில் கும்பாபிஷேக மலர் வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்.15

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரீதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா எதிர்வரும 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி தேவஸ்தானத்தில் இடம்பெறவுள்ளது.

வி.என்.சி.நாராயணசாமி தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அருளுரையையும், பிரம்மஸ்ரீ வ.இராஜேஸ்வரக்குருக்கள் ஆசியுரையையும் வழங்குவர்.

நிகழ்வில் வாழ்த்துரைகளை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (ஐ-201)


நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் நடமாட
# அருந்துங்கள்...!
## அண்ணா கோப்பி
**நல்லூர் ஆலய - சிவன் கோயிலுக்கு**
அருகிலுள்ள "அண்ணா"
வியாபார நிலையத்தில்
அண்ணா உற்பத்திப் பொருள்களான
❋ தோசை மா ❋ அப்பம் மா ❋ ஜீவாகாரம் ❋ அரிசிமா
❋ சரக்குத் தூள் ❋ சொட்டுநீலம்
அடங்கிய பொதியை 100/= ரூபா கொடுத்து வாங்கி நாம் வழங்குகின்ற இனாம் பொருள்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
(சி-37580)(34-21-13)


# ஓராண்டு நினைவஞ்சலி

*தோற்றம்*
04 – 01 – 1948



*மறைவு*
26 – 09 – 2003

## வைரமுத்து மார்க்கண்டு

அன்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
எம் உயிர்கள் தோறும் நின்ற இதயமே
உம்மை நிழல் என்று நினைத்திருந்தோம்
ஏன்? எம் கண்களைக் குளமாக்கிவிட்டுப் பிரிந்து விட்டீர்கள்?
ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு
ஒழியாது வாடுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

*மடத்தடி,*
*சண்டிலிப்பாய்.*
(36386)(42-2113)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## சலவைச் சேவை - 2005

## சுகாதார சேவைகள் பிரிவு - யாழ்ப்பாணம்

2005 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள கீழ்க்குறிப்பிடப்படும் அரசாங்க வைத்திய நிறுவனங்களுக்கு சலவைச் சேவை வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப் படிவங்களை மீளளிப்புடனான கேள்விக்கட்டுப்பணத்தையும் உரிய கேள்விப் பத்திரப் பணம் 50/-யும் செலுத்தி 2004.11.04ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 15.00 மணிவரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி 05.11.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும்.

கேள்விகள் சீல்வைக்கப்பட்ட உறையிலிட்டு கேள்வி விவரம் எழுதப்பட்டு இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளப் படமுடியும்.

1. ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை
2. மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழை
3. மாவட்ட வைத்தியசாலை ஊர்காவற்றுறை
4. மாவட்ட வைத்தியசாலை நெடுந்தீவு
5. மாவட்ட வைத்தியசாலை வல்வெட்டித்துறை
6. மாவட்ட வைத்தியசாலை புங்குடுதீவு
7. மாவட்ட வைத்தியசாலை சாவகச்சேரி
8. சுற்றயல் கூறு அச்சுவேலி
9. சுற்றயல் கூறு சங்கானை
10. சுற்றயல் கூறு கோப்பாய்
11. சுற்றயல் கூறு அனலைதீவு
12. சுற்றயல் கூறு காரைநகர்
13. சுற்றயல் கூறு நயினாதீவு
14. கிராமிய வைத்தியசாலை வேலணை
15. கிராமிய வைத்தியசாலை வட்டுக்கோட்டை
16. கிராமிய வைத்தியசாலை பண்டத்தரிப்பு
17. கிராமிய வைத்தியசாலை மருதங்கேணி
18. மத்திய மருந்தகமும் மகப்பேற்று மருத்துவமனையும் வரணி
19. மத்திய மருந்தகமும் மகப்பேற்று மருத்துவமனையும் கொடிகாமம்
20. மத்திய மருந்தகமும் மகப்பேற்று மருத்துவமனையும் குருநகர்
21. மத்திய மருந்தகமும் மகப்பேற்று மருத்துவமனையும் அளவெட்டி
22. மத்திய மருந்தகமும் மகப்பேற்று மருத்துவமனையும் கரவெட்டி
23. மத்திய மருந்தகமும் மகப்பேற்று மருத்துவமனையும் கோண்டாவில்
24. மத்திய மருந்தகமும் மகப்பேற்று மருத்துவமனையும் மானிப்பாய்
25. மத்திய மருந்தகம் சுன்னாகம்
26. மத்திய மருந்தகம் கொக்குவில்
27. மத்திய மருந்தகம் இணுவில்
28. மத்திய மருந்தகம் பருத்தித்துறை
29. மத்திய மருந்தகம் புன்னாலைக்கட்டுவன்
30. மத்திய மருந்தகம் புத்தூர்
31. மத்திய மருந்தகம் உடுவில்
32. மத்திய மருந்தகம் உரும்பிராய்
33. மத்திய மருந்தகம் வட்டுக்கோட்டை
34. மத்திய மருந்தகம் இளவாலை
35. மத்திய மருந்தகம் கைதடி
36. மத்திய மருந்தகம் ஏழாலை
37. மார்புநோய்ச் சிகிச்சை நிலையம் யாழ்ப்பாணம்

வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம்
பிரதி மாகாணப் பணிப்பாளர்
சுகாதாரசேவைகள், யாழ்ப்பாணம்.

(சி-37651)(34-21-13)

# தமிழீழ மீட்புநிதி மீளப்பெறுவோர் விவரம் – 2004

யாழ்ப்பாணம், செப். 15

தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளப்பெறுவோரில் தெல்லிப்பழை (ஒருதொகுதி), சங்கானை (ஒரு தொகுதி) உதவி அரச அதிபர் பிரிவுகளில் தெரிவானோர் விவரம் வருமாறு:-

## தெல்லிப்பழை உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| தெ/ 3162 | திரு. சீனியர் குணரத்தினம் |
| தெ/ 3198 | திருமதி. பர்வதம் விசுவலிங்கம் |
| தெ/ 3243 | திரு. இளையதம்பி வல்லிபுரம் |
| தெ/ 3334 | திரு. பொன்னையா நடராசா |
| தெ/ 3387 | திருமதி. பகவதி இரத்தினம் |
| தெ/ 3412 | திருமதி. பரிமளம் பிள்ளையினார் |
| தெ/ 3427 | திரு. ஆறுமுகம் தருமராசா |
| தெ/ 3453 | திரு. கார்த்திகேசு பதஞ்சலி |
| தெ/ 3496 | திரு. கந்தையா விஜயரத்தினம் |
| தெ/ 3505 | செல்வி. கோசலாதேவி மாணிக்கம் |
| தெ/ 3509 | திரு. சின்னப்பு குணரத்தினம் |
| தெ/ 3527 | திரு. கணபதி கிருஷ்ணர் |
| தெ/ 3653 | திரு. கந்தப்பிள்ளை சிவலிங்கம் |
| தெ/ 3672 | செல்வி. அமுதினி சின்னத்தம்பி |
| தெ/ 3677 | திரு. பொன்னுத்துரை பத்மநாதன் |
| தெ/ 3683 | திரு. முருகேசு இராசசிங்கம் |
| தெ/ 3693 | திருமதி. அம்மாப்பிள்ளை வல்லிபுரம் |
| தெ/ 3705 | திருமதி. புனிதவதி கந்தையா |
| தெ/ 3828 | திருமதி. சத்திஸ்வரி சிவலிங்கம் |
| தெ/ 3978 | திரு. முத்தையா சிவசுதன் |
| தெ/ 3986 | திருமதி. இரத்தினம் இராசையா |
| தெ/ 4067 | திருமதி. கமலாம்பிகை செல்வரத்தினம் |
| தெ/ 4148 | திருமதி. இராசம்மா சுந்தரமூர்த்தி |
| தெ/ 4310 | திரு. கந்தையா நடராசர் |
| தெ/ 4354 | செல்வி. ரஞ்சிதமலர் சீனி |
| தெ/ 4371 | திரு. செந்தில்நாதன் ஐயர் இரவிச்சந்திரன் |
| தெ/ 4462 | திருமதி. நாகேஸ்வரிஅம்மா தம்பிமுத்து |
| தெ/ 4502 | செல்வி. சிவதேவி சிங்கநாயகம் |
| தெ/ 4503 | திருமதி. பேரின்பநாயகி கதிரமலை |
| தெ/ 4509 | திரு. அகுஸ்தீன் செபமாலை |
| தெ/ 4510 | திரு. வையிரமுத்து பாலசிங்கம் |
| தெ/ 4525 | திருமதி. வரோனிக்கா மாட்டீன் |
| தெ/ 4552 | திரு. நாகர் கிருஷ்ணர் |
| தெ/ 4578 | திருமதி. பொன்மணி கந்தையா |
| தெ/ 4585 | திரு. அருணாசலம் விஸ்வநாதன் |
| தெ/ 4598 | திரு. கந்தவனம் கதிர்காமசிங்கம் |
| தெ/ 4613 | திருமதி. நாகம்மா கந்தையா |
| தெ/ 4643 | திரு. பொன்னு சிவசுப்பிரமணியம் |
| தெ/ 4651 | திரு. தாமோதரமபிள்ளை மோகனசுந்தரம் |
| தெ/ 4673 | திருமதி. மனோன்மணி அழகரட்ணம் |
| தெ/ 4703 | திரு. தம்பிமுத்து குகதாஸ் |
| தெ/ 4730 | திரு. முருகேசு நாகரத்தினம் |
| தெ/ 4756 | திரு. இராசா சிவராசா |
| தெ/ 4758 | திரு. முருகேசு சபாபதி |
| தெ/ 4782 | திரு. சடையர் சீனியர் |
| தெ/ 4804 | திரு. வயிரவி நன்னித்தம்பி |
| தெ/ 4816 | திரு. இராசையா பொன்னுத்துரை |
| தெ/ 4852 | திரு. அம்பலப்பிள்ளை செல்லத்துரை |
| தெ/ 4859 | திரு. நல்லதம்பி துரைராசா |
| தெ/ 4891 | திருமதி. ஞானாம்பிகை நாகலிங்கம் |
| தெ/ 4964 | திரு. கதிர்காமு இராசையா |
| தெ/ 5014 | திரு. சின்னத்தம்பி நாகரத்திணம் |
| தெ/ 5015 | திருமதி. சின்னத்தங்கச்சி சின்னத்துரை |
| தெ/ 5174 | திரு. முருகேசு இராமலிங்கம் |
| தெ/ 5193 | திரு. செல்லப்பா சின்னத்துரை |
| தெ/ 5194 | திருமதி. தனேஸ்வரி கணபதிப்பிள்ளை |
| தெ/ 5199 | திரு. சந்தியா செபஸ்தி |
| தெ/ 5227 | திரு. மகாரத்தினம் கருணாகரன் |
| தெ/ 5280 | திரு. சின்னத்தம்பி கதிரவேலு |
| தெ/ 5292 | திருமதி. கெங்கையம்மா சண்முகம் |
| தெ/ 5307 | திருமதி. செல்வமலர் தர்மபாலன் |
| தெ/ 5340 | திரு. வேலுப்பிள்ளை தம்பையா |
| தெ/ 5355 | திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் |
| தெ/ 5356 | திருமதி. மகேஸ்வரி கந்தையா |
| தெ/ 5451 | திரு. சின்னத்துரை செல்வநாயகம் |
| தெ/ 5481 | திரு. கார்த்திகேசு கந்தையா |
| தெ/ 5485 | திருமதி. மனோன்மணி வன்னியசிங்கம் |
| தெ/ 5494 | திரு. மாணிக்கம் சின்னத்துரை |
| தெ/ 5538 | திருமதி. நகுலாம்பிகை முத்துலிங்கம் |
| தெ/ 5594 | திருமதி. இலட்சுமி நாகலிங்கம் |
| தெ/ 5598 | திருமதி. மதியாபரணம் சுப்பிரமணியம் |
| தெ/ 5610 | திரு. நன்னிக்குட்டி சுந்தரமூர்த்தி |
| தெ/ 5645 | திருமதி. தையல்நாயகி சீவரெட்ணம் |
| தெ/ 5648 | திரு. கதிரேசு சுப்பிரமணியம் |
| தெ/ 5653 | திரு. வேலுப்பிள்ளை வல்லிபுரம் |
| தெ/ 5660 | திருமதி. மரியப்பிள்ளை தம்பியப்பு |
| தெ/ 5676 | திரு. கணபதிப்பிள்ளை சின்னப்பு |
| தெ/ 5705 | திரு. கந்தப்பிள்ளை அப்பாப்பிள்ளை |
| தெ/ 5747 | திருமதி. செல்வநாயகி சோமசுந்தரம் |
| தெ/ 5749 | திருமதி. மாணிக்கப்பிள்ளை கந்தரத்தினம் |
| தெ/ 5789 | திரு. கந்தர் சரவண்முத்து கந்தவனம் |
| தெ/ 5795 | திருமதி. அன்னம்மா முருகையா |
| தெ/ 5803 | திரு. தம்பையா யோகராசா |
| தெ/ 5808 | திருமதி. மரியம்மா சின்னப்பு |
| தெ/ 5883 | திருமதி. ஆச்சிப்பிள்ளை கனகசிங்கம் |
| தெ/ 5912 | திரு. ஆறுமுகம் இளையதம்பி |
| தெ/ 5924 | திருமதி. கௌரி நாராயணசாமி |
| தெ/ 5954 | திரு. கந்தையா கனகசுந்தரம் |
| தெ/ 6032 | திருமதி. சரஸ்வதி முருகையா |
| தெ/ 6035 | திரு. அப்பாப்பிள்ளை கனபதிப்பிள்ளை |
| தெ/ 6045 | திரு. சின்னத்துரை இரத்தினம் |
| தெ/ 6111 | திரு. மூத்ததம்பி சவுந்தரநாயகம் |
| தெ/ 6134 | திரு. வைத்திலிங்கம் இளையதம்பி |
| தெ/ 6191 | திரு. சின்னையா பொன்னம்பலம் |
| தெ/ 6209 | திருமதி. சரோஜினிதேவி பிள்ளையாகுட்டி |
| தெ/ 6240 | திரு. கந்தையா சின்னத்தம்பி |
| தெ/ 6294 | திரு. சங்கரப்பிள்ளை சிவசுப்பிரமணியம் |
| தெ/ 6315 | திருமதி. சரஸ்வதி சின்னத்தம்பர் |
| தெ/ 6317 | திரு. கந்தப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை |
| தெ/ 6391 | திரு. வல்லிபுரம் இராசநாயகம் |
| தெ/ 6445 | திருமதி. ஆச்சிக்குட்டி தியாகராசா |
| தெ/ 6447 | திருமதி. பாக்கியம் வேலுப்பிள்ளை |

## சங்கானை உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| ச/ 2 | திரு. பொன்னையா கனகரட்ணம் |
| ச/ 116 | திரு. வயிரவி முத்தையா |
| ச/ 139 | திரு. பொன்னையா நவரத்தினம் |
| ச/ 155 | திரு. பொன்னையா தங்கராசா |
| ச/ 257 | திரு. நாகமணி கந்தையா |
| ச/ 263 | திரு. வயிரவி இராமு |
| ச/ 360 | திரு. முருகேசு கார்த்திகேசு |
| ச/ 387 | திரு. முத்தையா விஜயமோகன் |
| ச/ 390 | திரு. வயிரவன் முருகன் |
| ச/ 403 | திரு. அப்பாத்துரைஐயர் இரத்தினசாமிக்குருக்கள் |
| ச/ 447 | திரு. இராமலிங்கம் சுந்தரம் |
| ச/ 463 | திருமதி. ஈஸ்வரிதேவி சுப்பிரமணியம் |
| ச/ 537 | திருமதி. ஞானமலர் தவராசா |
| ச/ 541 | திருமதி. சரோஜினிதேவி சிவஞானரத்தினம் |
| ச/ 552 | திரு. நமசிவாயம் தில்லையம்பலம் |
| ச/ 553 | திரு. கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம் |
| ச/ 557 | திருமதி. அன்னலெட்சுமி செவ்வந்திநாதன் |
| ச/ 605 | திரு. ஆறுமுகம் நாகலிங்கம் |
| ச/ 625 | திரு. சிவமயம் அருள்மயம் |
| ச/ 640 | திரு. முத்துக்குமாரு மயில்வாகனம் |
| ச/ 646 | திருமதி. அன்னம்மா சின்னத்தம்பி |
| ச/ 676 | திரு. கணபதி கிஸ்னர் |
| ச/ 697 | திரு. வைத்திலிங்கம் கணபதிமுத்து |
| ச/ 703 | திருமதி. அமிர்தம் சங்கரப்பிள்ளை |
| ச/ 838 | திருமதி. சிவஞானவதியார் கனகசபை |
| ச/ 877 | திரு. சபாபதிப்பிள்ளை அரியராசா |
| ச/ 890 | திரு. சண்முகம் பக்கிரிசாமி |
| ச/ 963 | திரு. அருணாசலம் ஆறுமுகம் |
| ச/ 965 | திரு. சின்னப்பொடி மாரிமுத்து |
| ச/ 1011 | திரு. வல்லிபுரம் அம்பலவாணநாதன் |
| ச/ 1033 | திரு. தில்லையம்பலம் கணபதிப்பிள்ளை |
| ச/ 1114 | திரு. பொன்னுத்துரை தயாபரன் |
| ச/ 1215 | திரு. கணபதிப்பிள்ளை விசுவலிங்கம் |
| ச/ 1270 | திருமதி. திலோத்தம்மை நவரத்தினம் |
| ச/ 1360 | திரு. ஆறுமுகம் குமாரசாமி |
| ச/ 1370 | திருமதி. சிவக்கொழுந்து வேலுப்பிள்ளை |
| ச/ 1373 | திரு. அம்பலவாணபிள்ளை சச்சிதானந்தன் |
| ச/ 1466 | திரு. குணரத்தினம் ராஜமோகன் |
| ச/ 1506 | திரு. வைத்திலிங்கம் சபாரத்தினம் |
| ச/ 1593 | திரு. மாணிக்கம் சிவலிங்கம் |
| ச/ 1599 | திருமதி. பொன்னம்மா சோமசுந்தரம் |
| ச/ 1650 | திருமதி. இரத்தினம்மா இராசதுரை |
| ச/ 1676 | செல்வி. கண்மணியம்மா இராமலிங்கம் |
| ச/ 1701 | திருமதி. மகேஸ்வரி இராஜபட்சம் |
| ச/ 1731 | திரு. குணரத்தினம் கந்தையா |
| ச/ 1744 | திரு. முருகேசு சுப்பிரமணியம் |
| ச/ 1807 | திரு. வயிரமுத்து கணபதிப்பிள்ளை |
| ச/ 1808 | திரு. வயிரமுத்து கணபதிப்பிள்ளை |
| ச/ 1820 | திரு. கந்தையா சபாபதிப்பிள்ளை |
| ச/ 1834 | திரு. நாகலிங்கம் அமிர்தலிங்கம் |
| ச/ 1836 | திரு. முருகேசு கிருஷ்ணபிள்ளை |
| ச/ 1856 | திரு. தியாகராசா அரசரத்தினம் |
| ச/ 1881 | திருமதி. தங்கரத்தினம் முருகேசு |
| ச/ 1896 | திரு. கந்தையா நாகராசா |
| ச/ 1903 | திரு. வேலுப்பிள்ளை இராமநாதன் |
| ச/ 1907 | திருமதி. மகேஸ்வரி நடராசா |
| ச/ 1958 | திரு. அம்பலவாணர் சிதம்பரப்பிள்ளை |
| ச/ 2004 | திருமதி. அன்னமுத்து பொன்னுத்துரை |
| ச/ 2022 | திரு. விநாசித்தம்பி செல்லையா |
| ச/ 2033 | திரு. சுப்பையாகுருக்கள் சண்முகரத்தினசர்மா |
| ச/ 2040 | திரு. பொன்னம்பலம் மண்டலசேகரம் |
| ச/ 2045 | திரு. செல்லப்பா நடராசா |
| ச/ 2073 | திரு. ஆறுமுகம் கனகரத்தினம் |
| ச/ 2126 | திரு. ஆறுமுகம் குமாரசுவாமி |
| ச/ 2131 | திரு. கனகசபாபதி நவரத்தினராசா |
| ச/ 2195 | திருமதி. செல்லம்மா செல்லையா |
| ச/ 2237 | திருமதி. தவமணி சிவலிங்கம் |
| ச/ 2337 | திருமதி. ஜெயகௌரி செல்வராசு |
| ச/ 2379 | திரு. கந்தசாமி கேசவதாசன் |
| ச/ 2418 | திருமதி. திலகவதி வீரசிங்கம் |
| ச/ 2446 | திரு. அருணாசலம் சபாரத்தினம் |
| ச/ 2537 | திருமதி. லோகேஸ்வரி கணபதிப்பிள்ளை |
| ச/ 2592 | திரு. பொன்னையா ஜெயராசா |
| ச/ 2593 | திரு. வயிரமுத்து நடராசன் |
| ச/ 2606 | திரு. ஐயாத்துரை தெய்வேந்திரம் |
| ச/ 2608 | திருமதி. நேசதேவி இராசதுரை |
| ச/ 2645 | செல்வி. திவாஜினி நல்லையா |
| ச/ 2673 | திரு. பொன்னையா செல்வநாயகம் |
| ச/ 2760 | திரு. சுப்பையா கதிரவேலு |
| ச/ 2801 | திரு. வைரவநாதன் பொன்னையா |
| ச/ 2827 | திரு. கந்தர் சின்னத்துரை |
| ச/ 2858 | திரு. சின்னக்குட்டி செல்லத்துரை |
| ச/ 2896 | செல்வி. மங்கையற்கரசி பொன்னையா |
| ச/ 2912 | செல்வி. சோதிமலர் பரஞ்சோதி |
| ச/ 2956 | திரு. சின்னத்தம்பி துரை |
| ச/ 2959 | செல்வி. பூரணம் நாகலிங்கம் |
| ச/ 2961 | திருமதி. மீனலோசனி இராசரத்தினம் |
| ச/ 2971 | திரு. கிருஷ்ணர் சின்னத்துரை |
| ச/ 3001 | திரு. தில்லையம்பலம் சுப்பையா |
| ச/ 3004 | திரு. கிருஷ்ணர் துரைசுவாமி |
| ச/ 3027 | திருமதி. இராஜேஸ்வரி கந்தவனம் |
| ச/ 3054 | திரு. கிருஸ்ணர் வைரமுத்து |
| ச/ 3081 | திரு. அண்ணாமலை பாலசிங்கம் |
| ச/ 3190 | திரு. வேலுப்பிள்ளை செல்லத்துரை தில்லையம்பலம் நடராசா |
| ச/ 3266 | திரு. வேலுப்பிள்ளை காசிப்பிள்ளை |
| ச/ 3270 | திரு. ரோணி கணேசன் |
| ச/ 3313 | திருமதி. மங்கையற்கரசி கதிரவேல் |
| ச/ 3322 | திரு. ஞானப்பிரகாசம் கதிர்காமநாதன் |
| ச/ 3344 | திருமதி. விசாலாட்சி பேரம்பலம் |
| ச/ 3388 | திரு. செல்லப்பா அப்பாத்துரை |
| ச/ 3389 | திரு. கதிரவேலு கந்தையா |
| ச/ 3395 | திரு. முத்துத்தம்பி கந்தசாமி |
| ச/ 3401 | திரு. முத்துசாமி கணேசநாயகம் |
| ச/ 3410 | திரு. செல்லப்பா அப்பாத்துரை |
| ச/ 3454 | திரு. கந்தையா சண்முகநாதன் |
| ச/ 3487 | திரு. கறுவல்தம்பி எதிர்நாயகம் |
| ச/ 3493 | திரு. தம்பிப்பிள்ளை துரைசிங்கம் |
| ச/ 3537 | திரு. நமசிவாயம் கணேசலிங்கம் |
| ச/ 3556 | திரு. அருணாசலம் கந்தையா |
| ச/ 3564 | திரு. சபாபதிப்பிள்ளை இராசரத்தினம் |
| ச/ 3576 | திரு. திருஞானம் மனோகரன் |
| ச/ 3592 | திரு. முத்துக்குமாரு ஆறுமுகம் |
| ச/ 3593 | திரு. முத்துக்குமாரு ஆறுமுகம் |
| ச/ 3626 | திரு. அப்பாக்குட்டி குணரத்தினம் |
| ச/ 3653 | திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி |
| ச/ 3666 | திரு. முத்துக்குமாரு தருமலிங்கம் |
| ச/ 3770 | திரு. இராமசாமி நாகலிங்கம் |
| ச/ 3843 | திரு. மார்க்கண்டபிள்ளை சிவசுப்பிரமணியம் |
| ச/ 3852 | திரு. நாகலிங்கம் நடராசா |
| ச/ 3854 | திரு. கந்தையா பஞ்சலிங்கம் |
| ச/ 3908 | திரு. இராமநாதன் புத்திரராசா |
| ச/ 3953 | திருமதி. யோகேஸ்வரி பத்மகுமாரன் |
| ச/ 3992 | திரு. தம்பியப்பா திருவருட்செல்வம் |
| ச/ 3997 | திரு. அப்புக்குட்டி வாலசிங்கநாயகம் |
| ச/ 4031 | செல்வி. தில்லைநாயகி கந்தவனம் |
| ச/ 4132 | திரு. ஆறுமுகம் முருகேசு கிருஷ்ணபிள்ளை |
| ச/ 4138 | செல்வி. நவமணிதேவி துரையப்பா |
| ச/ 4181 | திரு. வெற்றிவேலு பாலசுப்பிரமணியம் |
| ச/ 4229 | திருமதி. திரவியமலர் செல்வராசா |
| ச/ 4291 | திரு. துரைசிங்கம் கெங்காதரன் |
| ச/ 4335 | திரு. இராசதுரை ஸ்கந்த் விஜிகுமார் |
| ச/ 4392 | திரு. வேலுப்பிள்ளை முத்துத்தம்பி |
| ச/ 4466 | திரு. முத்தையா சீவரத்தினம் |
| ச/ 4523 | திருமதி. திருஞானதேவி சிவப்பிரகாசம் |
| ச/ 4548 | திருமதி. சீதாலட்சுமி முருகுப்பிள்ளை |
| ச/ 4581 | திரு. கந்தையா இராமமூர்த்தி |
| ச/ 4625 | திரு. வேலாயுதர் கந்தர் |
| ச/ 4678 | திருமதி. பராபரி மதியாப[illegible] |
| ச/ 4705 | திரு. இரகுநாதன் தில்லை[illegible]ன் |
| ச/ 4745 | திருமதி. இராசாத்தியம்மா நாகராசா |
| ச/ 4805 | திரு. சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் |
| ச/ 4824 | திரு. முருகர் நாராயணன் |
| ச/ 4835 | திரு. நாகலிங்கம் நடராசா |
| ச/ 4860 | திரு. சின்னட்டி ஆறுமுகம் |
| ச/ 4861 | திருமதி. செல்லம் கார்த்திகேசு |
| ச/ 4891 | திரு. முத்துக்குமாரு அருணாசலம் |
| ச/ 4915 | திரு. வீரகத்தி கந்தையா |
| ச/ 4935 | திரு. விசுவநாதர் கந்தையா |
| ச/ 4958 | திருமதி. பரமேஸ்வரி வைரமுத்து |
| ச/ 4960 | திரு. சின்னத்தம்பி வல்லிபுரம் |
| ச/ 4978 | திரு. வேலன் கந்தையா |
| ச/ 4994 | திரு. முருகன் கதிரவேலு |
| ச/ 5052 | திரு. செல்வநாயகம் ஆறுமுகம் |
| ச/ 5084 | திருமதி. இரத்தினேஸ்வரி இரத்தினம் |
| ச/ 5087 | திரு. வைரவி செல்லத்துரை |
| ச/ 5091 | திரு. செல்லப்பா சீவரத்தினம் |
| ச/ 5098 | செல்வி. புஸ்பதேவி செல்லத்துரை |
| ச/ 5135 | திரு. பிள்ளையான் சின்னத்துரை |
| ச/ 5182 | திரு. சின்னத்தம்பி திருநாவுக்கரசு |
| ச/ 5235 | திரு. வேலுப்பிள்ளை கனகசபாபதி |
| ச/ 5247 | திருமதி. இராசமலர் சிவப்பிரகாசம் |
| ச/ 5258 | திரு. மாணிக்கம் மகேந்திரன் |
| ச/ 5307 | திருமதி. அன்னம்மா முத்தையா |
| ச/ 5320 | திருமதி. சிவக்கொழுந்து தம்பையா |
| ச/ 5380 | திருமதி. பொன்னம்மா கந்தையா |
| ச/ 5390 | திரு. சபாரத்தினம் நடராசா |
| ச/ 5433 | திரு. சதாசிவம் செல்லையா |
| ச/ 5447 | திருமதி. பொன்னம்மா சண்முகநாதன் |
| ச/ 5470 | திரு. செல்லர் பூபாலசிங்கம் |
| ச/ 5480 | திருமதி. தெய்வானைப்பிள்ளை மாரிமுத்து |
| ச/ 5539 | திரு. விநாசித்தம்பி கந்தையா |
| ச/ 5551 | திருமதி. சிவகாமிப்பிள்ளை தம்பையா |
| ச/ 5578 | திரு. சுப்பிரமணியம் அருளம்பலம் |
| ச/ 5585 | திரு. சின்னையா மார்க்கண்டேயர் |
| ச/ 5598 | திரு. இராசகாரியார் கந்தசாமி |
| ச/ 5601 | திரு. இளையதம்பி செல்லையா |
| ச/ 5609 | திரு. துரையப்பா சிவநேசராசா |
| ச/ 5610 | திருமதி. சுசீலா ஆனந்தராசா |
| ச/ 5611 | திருமதி. மீனாட்சிப்பிள்ளை சுப்பையா |
| ச/ 5615 | திரு. இலட்சுமணன் நடராசா |
| ச/ 5618 | திரு. செல்லர் கந்தையா |
| ச/ 5676 | திருமதி. தங்கம்மா கனகசபை |
| ச/ 5685 | திருமதி. செல்லம்மா கந்தையா |
| ச/ 5736 | திரு. நடராசா கந்தஞானியார் |
| ச/ 5748 | திரு. இராமநாதர் கந்தமுத்து |
| ச/ 5806 | திரு. நாகலிங்கம் வேலுப்பிள்ளை |
| ச/ 5837 | திரு. கந்தசாமி குமரகுரு |
| ச/ 5846 | திரு. வேலன் மினாசி |
| ச/ 5887 | திருமதி. இரஞ்சிதராணி வசந்தகுமார் |
| ச/ 5897 | திரு. வல்லிபுரம் நல்லையா |
| ச/ 5902 | திரு. வையாபுரி அப்புத்துரை |
| ச/ 5919 | திரு. கணபதிப்பிள்ளை சிவசம்பு |
| ச/ 5949 | திரு. தம்பையா வீரகத்தி |
| ச/ 5951 | திருமதி. ஜெயந்தி குலேந்திரன் |
| ச/ 6004 | திருமதி. தவபாக்கியம் மதியாபரணம் |
| ச/ 6059 | திரு. அருணாசலம் நடராசா |
| ச/ 6060 | திருமதி. நாகம்மா செல்லையா |
| ச/ 6066 | திருமதி. கனகம்மமா பாலசிங்கம் |
| ச/ 6079 | திரு. இராசா சுப்பிரமணியம் |
| ச/ 6085 | திருமதி. நாகம்மா கனசபை |
| ச/ 6104 | திரு. துரைராசசிங்கம் நிர்மலசிங்கம் |
| ச/ 6172 | திருமதி. அன்னலட்சுமியம்மா சின்னத்துரை |
| ச/ 6181 | திரு. சிவந்தான் சிவந்தான் |
| ச/ 6216 | திரு. வைரவப்பிள்ளை மயில்வாகனம் |
| ச/ 6275 | திரு. பரராசசேகரம் கோகிலதாஸ் |
| ச/ 6315 | திரு. கனகசபை கந்தையா |
| ச/ 6346 | திரு. கதிர்காமத்தம்பி பாலச்சந்திரா |
| ச/ 6371 | திருமதி. சத்தியம்மா கனகநாயகம் |
| ச/ 6386 | திருமதி. தேவி சிவஞானம் |
| ச/ 6425 | திரு. தம்பு சுப்பிரமணியம் |
| ச/ 6480 | திரு. செல்லப்பா கந்தையா |

(வளரும்)

# கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரணதரம்)

# மாதிரிப்பரீட்சை - 2004

கணிதம் II பத்திரம் II

நேரம்: மூன்று மணித்தியாலம்

தயாரித்தவர் : V.சிவராஜா

முதலாம் வினாவிற்கும் வேறுஏதாவது ஏழு வினாக்களுக்கும் மாத்திரம் விடை எழுதுக.
முதலாம் வினாவின் விடைக்கு ஒவ்வொரு பகுதிக்கும் 7 புள்ளிகள் வீதம் 42 புள்ளிகளும் மற்றைய வினாக்கள் ஒவ்வொன்றின் விடைக்கும் 14 புள்ளிகளும் வழங்கப்படும்.

**கவனிக்க - அறிவுறுத்தலுக்கு அமைய முதலாம் வினாவிற்கும் வேறு 7 வினாக்களுக்கும் மாத்திரம் விடை எழுதுக. மேலதிகமாக எழுதப்படும் விடைகள் பரீட்சார்த்தியினால் வெட்டிவிடப்படுதல் வேண்டும். அவ்வாறில்லையெனில் அவை பரீட்சகரினால் புள்ளி வழங்கப்படாது வெட்டிவிடப்படும்.**


01. a) பூச்சாடி ஒன்றிற்கும் பொம்மை ஒன்றிற்கும் இடையிலான விலைவிகிதம் 5:3 உம், பொம்மை ஒன்றிற்கும் கடிகாரம் ஒன்றிற்கும் இடையிலான விலைவிகிதம் 2:7 உம் ஆகும். வர்த்தகர் ஒருவரிடம் மூன்று பூச்சாடிகள், 4 பொம்மைகள், 2 கடிகாரங்கள் என்பவற்றை கொள்வனவுசெய்த ஒருவர் மொத்தமாக ரூபா 960 கொடுத்தார்.

I. பூச்சாடி, பொம்மை, கடிகாரம் என்பவற்றிற்கிடையிலான விலைவிகிதம் யாது?
II. மேற்குறிப்பிட்ட மூன்று பொருள்களின் விலையையும் தனித்தனியே காண்க.
III. பொம்மை வாங்குவதற்காக செலவிட்ட பணம் அவரின் மொத்த செலவில் எத்தனை சதவீதமாகும்?

(b) I. அப்பிள் ஒன்றின் விலை ரூபா 20, தோடம்பழம் ஒன்றின் விலை ரூபா 15 என்ற அடிப்படையில் குறித்த எண்ணிக்கையான அப்பிள்பழங்களையும் குறித்த எண்ணிக்கையான தோடம்பழங்களையும் வாங்கிய மஞ்சு, இரண்டுமாக 45 பழங்களை வாங்கினாள். அதற்காக அவள் கொடுத்த பணம் ரூபா 800. அவள் வாங்கிய அப்பிள்களின் எண்ணிக்கை a எனவும் தோடம்பழங்களின் எண்ணிக்கை b எனவும் கொண்டு மேற்படி தகவல்களுக்கு அமைவாக ஒருங்கமை சமன்பாட்டுச் சோடி ஒன்றைப் பெறுக. அதனை தீர்த்து அல்லது வேறு ஏதேனும் ஒருவழியில் மஞ்சுவாங்கிய தோடம்பழங்களின் எண்ணிக்கையைக் காண்க.

II. $x^2 + y^2 = 25$, $xy = 12$ எனின் $x+y$, $x-y$ என்பவற்றின் இயல்தகு பெறுமானங்களைக் காண்க.

(c) வரிப்படத்தில் காட்டப்பட்டவாறு L,M,N,O எனும் நான்கு புள்ளிகளும் வட்டம் ஒன்றின் பருதியில் உள்ளன. கோடு XLY என்பது L இல் வட்டத்திற்கு தொடலி ஆகும். $L\hat{Y}O = 36^\circ$ $O\hat{L}Y = 44^\circ$ எனின் கீழ்வருவனவற்றைக் காண்க. உமது விடைக்கான காரணத்தைத் தருக.




I. $L\hat{N}O$
II. $L\hat{M}N$
III. $X\hat{L}M$

(D) பால்மா அடைப்பதற்குப் பயன்படுத்தப்படும் செவ்வட்ட உருளை வடிவான தகரப்பேணி ஒன்றின் உயரம் 10cm உம் விட்டம் 14cm உம் ஆகும்.

I. $2cm^2$ பரப்பளவிற்கு சுட்டுத்துண்டு ஒட்டுவதற்கு ஒருசதம் செலவாகும் எனில் ஒரு பால்மாபேணிக்கு சுட்டுத்துண்டு (லேபிள்) ஒட்டுவதற்கு ஆகும் செலவை ரூபாவில் காண்க.
II. $1cm^3$ மாவின் நிறை 0.5g எனவும் பேணியில் 20g கொள்ளவுப்பிரதேசம் வெறுமையாக விடப்படுகிறது எனவும் கொள்க. பேணியில் அடைக்கப்படும் பால்மாவின் நிறையாது.

(ஆரை r ஆகவுள்ள உருளை ஒன்றின் வளைமேற்பரப்பு $= 2\pi r h$ ஆகும். கனவளவு $= \pi r^2 h$ ஆகும் $\pi = \frac{22}{7}$ எனக்கொள்க. h என்பது உயரமாகும்)

(e) தரம் 11 இல் கல்வி கற்கும் 40 மாணவர்களின் உயரங்கள் தொடர்பான தகவல்களைக் கீழ்வரும் மீடிறன் பரம்பல்காட்டுகிறது.

| மாணவர் உயரம் cm இல் | 125-129 | 130-134 | 135-139 | 140-144 | 145-149 | 150-154 | 155-159 |
|---|---|---|---|---|---|---|---|
| மாணவர் எண்ணிக்கை | 5 | 7 | 7 | 10 | 1 | 3 | 7 |

I. இப்பரம்பலின் ஆகாரவுகுப்பு யாது?
II. இடையவகுப்பின் நடுப்பெறுமானத்தை உத்தேச இடையாகக் கருதி ஒரு பிள்ளையின் சராசரி உயரத்தைக் கணிக்க.
III. வகுப்பில் 40% மானோர் பெண்பிள்ளைகளாவர், பெண்பிள்ளைகளின் சராசரி உயரம் 135cm எனில், ஆண்பிள்ளைகளின் சராசரி உயரத்தைக் கணிக்க.

(f) A,B,C ஆகிய மூன்று மாணவர்கள் போட்டிப்பரீட்சை ஒன்றிலே சித்தியடைவதற்கு எதிர்பார்க்கப்படும் நிகழ்தகவுகள் முறையே $\frac{7}{10}, \frac{6}{10}, \frac{8}{10}$ ஆகும். இப்பரீட்சையில் மூவரும் சித்தியடைவதற்கு அல்லது சித்தியடையாமல் தவறுவதற்கான எல்லாச்சந்தர்ப்பங்களையும் காட்டும் தருவரிப்படம் ஒன்று வரைக.

I. B மட்டும் சித்தியடைவதற்கான நிகழ்தகவைக் காண்க.
II. மூன்று மாணவர்களில் குறைந்த ஒருவராவது சித்தியடைவதற்கு 98% மான வாய்ப்பு உள்ளது என ஒருவர் தெரிவிக்கின்றார். மேற்படி நிகழ்வின் அடிப்படையில் இக்கூற்று உண்மையாகுமா? ஏன்.

02. (a) குறிப்பிட்ட பொருள் ஒன்றின் உடன் விற்பனை விலை ரூபா 80.000 ஆகும இப்பொருள் வாடகைக்கொள்வனவு முறையில் கொள்வனவு செய்யப்படும் பொழுது காசுவிலையின் 25% செலுத்தப்பட்டு மிகுதி ஒவ்வொன்றும் 5 650/= வான 12 தவணைக்கட்டணங்களில் செலுத்தப்படுவதன் மூலம் கொடுப்பனவு செய்யப்படலாம் என்ற நிபந்தனையின் கீழ் கொள்வனவு செய்யப்படுகிறது.

I. வாடகைக் கொள்வனவினால் ஏற்படும் மேலதிக செலவு யாது?
II. அறவிடப்படும் ஆண்டு வட்டிவீதம் யாது?

(b) ஆண்டுக்கு 5% கூட்டுவட்டியுடன் 2 ஆண்டுகாலத்தின் முடிவில் கடன் செலுத்தி தீர்க்கப்படும் என்ற நிபந்தனையின் கீழ் 14 000/= வைக் கடனாகப் பெற்ற ஒருவர் முதலாவது ஆண்டின் முடிவில் ரூபா 4700 ஐ செலுத்தினார். இரண்டாவது ஆண்டு முடிவில் ரூபா 2500 ஐ செலுத்திய பன் எஞ்சும் கடனை புதிய வட்டிவீதம் ஒன்றின் கீழ் 6 மாதத்தில் செலுத்துவதாக இணங்கிக் கொண்டார். அடுத்துவந்த 6 ஆம் மாத முடிவில் ரூபா 8 480 ஐ செலுத்தி கடனில் இருந்துவிடுபட்டார் எனில், மூன்றாவது ஆண்டுக்காலத்தின் 6 மாதங்களுக்கும் அறவிடப்பட்ட ஆண்டு வட்டிவீதம் யாது?

03. (a) சார்பு $y = 5 - x^2$ ஐ வரைவதற்கான x,y ஆகியவற்றைக்கொண்ட பூரணமற்ற அட்டவணை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

| x | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|
| y | -4 | - | - | 5 | - | 1 | -4 |

I. மேற்குறித்த அட்டவணையை உமது விடைத்தாளில் பிரதி செய்து அதில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.
II. தரப்பட்ட வரைபுத்தாளில் x அச்சுவழியேயும் y அச்சுவழியேயும் 10 சிறு பிரிவுகள் ஓர் அலகு என்ற அளவிடைக்கு அமைய மேற்குறித்த சார்பின் வரைபை வரைக.

(b) உமது வரைபைப் பயன்படுத்தி

I. வரைபின் உச்சியின் ஆள்கூறுகளை எழுதுக.
II. சார்பின் சமச்சீர் அச்சின் சமன்பாட்டைத்தருக.
III. சார்பு நேராக இருக்கும் x இன் பெறுமானவீச்சை எழுதுக.
IV. சமன்பாடு $x^2 + x - 4 = 0$ என்பதன் மூலகங்களைக் காண்க.
V. சார்பு $y = 100 - x^2$ எனும் வரைபின் உயர்வுப் பெறுமானத்தை உய்த்தறிக.

04. நேர்விளிம்பு கருவி, cm/mm அளவுகோல், கவராயம் என்பவற்றை மட்டும் பயன்படுத்தி, அமைப்புக்கோடுகள் யாவற்றையும் தெளிவாகக் காட்டி


I. AB = 3cm, BC = 5cm, CD = 6cm, DA = 4cm, BD = 5 cm, ஆகவுள்ள நாற்பக்கல் ABCD ஐ அமைக்க.
II. x என்பது நீட்டப்பட்ட AB யில் ஒரு புள்ளியாகும். நாற்பக்கல் ABCD யின் பரப்பளவிற்குச் சமனான பரப்பளவுடைய முக்கோணி DAX ஐ அமைக்க.
III. $B\hat{A}D$ பற்றி யாது கூறமுடியும்.
IV. நாற்பக்கல் ABCD யின் பரப்பளவைக் காண்க.
V. உச்சிகள் B,C,D என்பவற்றின் ஊடாக செல்லும் வட்டம் ஒன்றுவரைக.
VI. நீர் வரைந்த வட்டத்தின் ஆரையை அளக்க.

05. (a) சூத்திரத்தைப் பயன்படுத்தி அல்லது வர்க்க நிறைவாக்கலின் மூலம் சமன்பாடு $x^2 + 3x + 1 = 0$ ஐ தீர்க்க.

(b) விமானம் ஒன்றிலிருந்து போடப்படும் குண்டு ஒன்று ஒரு செக்கனில் கீழே விழும் தூரம் முந்திய செக்கனில் விழுந்த தூரத்திலும் 10m கூடியதாக இருக்கும் போடப்படும் முதலாவது செக்கனில் அது 5m சதுரம் விழுகிறது எனக்கொள்க.

I. போடப்பட்ட 10 ஆவது செக்கனில் அது விழுந்த தூரம் யாது.
II. முதல் 10 செக்கனில் விழுந்த தூரம் யாது?
III. 2000m உயரத்திலிருந்து குண்டுபோடப்பட்டால் தரையில் விழ எடுக்கும் நேரம் யாது?

06. 28cm விட்டமுடையதும் 60cm உயரம் உடையதுமான உருளை வடிவ கண்ணாடிப்பாத்திரம் ஒன்றின் அடியில் அரைக்கோள வடிவமானதும் உருளைக்கு சமமான விட்டமுயைதுமான திண்மம் ஒன்று உள்ளது. உருளையின் மூடியானது உட்புறமாகக் குவிந்த செங்கூம்பு வடிவமானது. இப்பாத்திரம் நீருடன் மூடப்பட்டுள்ள விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது.





I. மூடியின் கனவளவு $2464cm^3$ எனில் அதன் உயரத்தைக் காண்க.
II. பாத்திரம் கொண்டுள்ள நீரின் கனவளவைக் காண்க.
III. இப்பாத்திரத்தில் உள்ள நீர் 28cm விட்டமுடைய தட்டையான அடிப்பரப்பைக் கொண்ட செவ்வுருளை வடிவப் பாத்திரத்தில் ஊற்றப்பட்டால் நீர் மட்டத்தின் உயரம்யாது?

(r என்பது ஆரையையும் h என்பது உயரத்தையும் குறிக்கும். $\pi = \frac{22}{7}$ எனக் கொள்க.
செவ்வட்ட கூம்பின் கனவளவு $= \frac{1}{3}\pi r^2 h$ கோளத்தின் கனவளவு $= \frac{4}{3}\pi r^3$
உருளையின் கனவளவு $= \pi r^2 h$

(09ஆம் பக்கம் பார்க்க)

07. (a) வட்ட நாற்பக்கல் ஒன்றின் புறக்கோணம் அதன் ஆகத்தெதிர்க்கோணத் திற்கு சமனாகும் என்ற தேற்றத்தினை நிறுவிக்காட்டுக.

(b)




மேலுள்ள உருவில் PQRS ஒரு வட்ட நாற்பக்கல், PQ என்பது விட்டம் நீட் டப்பட்ட PQ வும் SR ம் T யில் சந்திக்கின்றன.

I. $S\hat{P}Q$ இற்குரிய நிரப்புக் கோணம் ஒன்றைப் பெயரிடுக.

II. $S\hat{P}Q : S\hat{Q}T$ எனும் விகிதத்தை பக்க நீளங்களின் சார்பில் தருக.

III. $S\hat{Q}T$ இற்கு இயல்பொத்த முக்கோணி எது?

08 (a) மரக்கறி வியாபாரி ஒருவரிடமிருந்து பொருள்களை ஏற்றி இறக்குவதற்கு கீழ்க்குறிப்பிடப்படும் அடிப்படையில் கட்டணம் அறவிடப்படுகின்றது. முதல் 100kg இற்கு ரூபா 225 உம் அடுத்து வரும் ஒவ்வொரு 10kg இற்கும் ரூபா 30 உம் அறவிடப்படும். 300kg இற்கு மேற்பட்ட நிறைக்குப் பின்னர் ஏற்றப்படும் ஒவ்வொரு கிலோக்கிராமிற்கும் ரூபா 4 என்ற விகிதத் தில் கட்டணம் அறவிடப்படும்.

I. 225kg மரக்கறிக்காக அறவிடப்படும் கட்டணம் யாது?

II. 303kg மரக்கறிக்காக அறவிடப்படும் கட்டணம் யாது?

III. குறிப்பிட்ட நிறைகொண்ட மரக்கறிகளைக் குளிர்சாதன வசதிகொண்ட கொள்கலன் மூலம் அனுப்புவதற்கு வழமையான கட்டணத்திற்கு மேலதிகமாக 10% கட்டணம் அறவிடப்பட்டது. வியாபாரி கட்டணமாக ரூபா 1787.50 ஐ செலுத்தினார் எனில் அனுப்பப்பட்ட மரக்கறிகளின் நிறையாது?

(b) X, Y, Z ஆகிய மூவரும் கூட்டுவியாபாரம் ஒன்றை நடத்துகின்றனர். X தைமாதத்தில் ரூபா 8,000 முதலிட்டு வியாபாரத்தைத் தொடங்கினார். Y சித்திரை மாதம் ரூ. 10,000 முதலிட்டும் Z ஆடி மாம் ரூ. 12,000 முத லிட்டும் வியாபாரத்தில் இணைந்துகொண்டனர். ஆண்டு முடிவில் இலாபமாக ரூபா 8600 கிடைத்தது.

I. X, Y, Z ஆகியோரிடையே இலாபம் பங்கிடப்படவேண்டிய விகிதத்தைக் காண்க

II. மூவரும் பெற்ற இலாபத்தைத் தனித்தனியாகக் காண்க.

09. (a) இலங்கையில் போக்குவரத்து நெரிசல் மிக்க மாகாணம் ஒன்றிலே 30 மாத காலப்பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துக்கள் தொடர்பாக சேகரிக்கப்பட்ட தரவுகளைக் கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது.


| விபத்துக் களின் எண்ணிக்கை | 27-35 | 36-44 | 45-53 | 54-62 | 63-71 | 72-80 |
|---|---|---|---|---|---|---|
| மாதங்கள் | 2 | 2 | 6 | 8 | 8 | 4 |

I. மேற்குறிப்பிட்ட தரவுகளுக்கு அமைவாக ஒருமாதத்தில் நிகழ்ந்த மிகக குறைந்த அளவான விபத்துக்களின் எண்ணிக்கை எத்தனையாக இருக்கலாம்.

II. வகுப்பாயிடை 54-62 இன் நடுப்பெறுமானத்தை உத்தேசித்த இடையாகக் கருதி மாதம் ஒன்றில் இடம்பெற்ற சராசரி விபத்துக்களின் எண்ணிக்கை யைக் காண்க.

III. ஏதேனும் ஒருமாத காலப்பகுதியில் இடம்பெற்ற விபத்துக்களின் எண் ணிக்கை 45-53 ஆக இருப்பதற்கான நிகழ்தகவினை சதவீதத்தில் காண்க.

(b) தரப்பட்ட பை வரைபடம் குறித்த மாவட்டம் ஒன்றின் பயன்பாட்டிற்குரிய நிலப்பரப்பு பயன் படுத்தப்படும் விதத்தைக் காட்டுகின்றது. இதிலிருந்து





I. வீடுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பு

II. நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பு

III. மொத்த நிலப்பரப்பு

என்பவற்றைக் காண்க.

10. (a) 1:10,000 எனும் அளவிடைக்கு வரையப்பட்ட நிலப்பிரதேசம் ஒன்றின் கிடைப்படம் கீழே தரப்படுகின்றது.




I. மேலுள்ள படத்தை வரைவதற்கு பயன்படுத்தப்பட்ட வெளிக்கள ஏட்டுக் குறிப்பை எழுதுக.

II. கிடைப்படத்தின் பரப்பளவை $cm^2$ இல் காண்க.

III. தரப்பட்ட நிலப்பிரதேசத்தின் பரப்பளவை $km^2$ இல் காண்க.

(b) நேரான வீதியொன்றில் நடந்துவரும் x என்பவர் அடுக்குமாடி ஒன்றில் பழுது பார்க்கும் வேலையில் ஈடுபட்டுள்ள Y என்பவரை 21°48' ஏற்றக்கோணத்தில் காண்கிறார். X என்பவர் Y ஐ அவதானித்த பின்பு Y ஐ நோக்கி 80m நடந்தபின்னர் Y என்பவர் X ஐ 50°12' இறக்கக்கோணத்தில் காண்கிறார் எனில் Y நிலமட்டத்தில் இருந்து எவ்வளவு உயரத்தில் இருந்திருப்பார் எனக் காண்க.


# கல்விச்சாலைக் காட்சிகள்



கைதடி - நுணாவில் மாதர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவில் வினோத உடைப் போட்டியில் பங்குகொண்ட மாணவர்களைப் படத்தில் காணலாம். (எ)



அண்மையில் நடைபெற்ற கோண்டாவில் மேற்கு தமிழ்வேதபாராயண சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழாவில் மாணவர்கள் நிகழ்த்திய உடற்பயிற்சி நிகழ் வைப் படத்தில் காணலாம். *(படம்: வலி. மேற்கு செய்தியாளர்).*



யாழ்ப்பாணம், கொட்டடி கண்ணாபுரம் பாலர் பாடசாலையின் விளையாட்டுப்போட்டியில் வெற்றி யீட்டிய மாணவன் ஜெயராசா உதயராஜ் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட கண்ணபுரம் பிரிவுக் கிராம அலுவலர் சுந்தரலிங்கத்திடமிருந்து பரிசில் பெறுவதைப் படத்தில் காணலாம். (10-15)



நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியின் வருடாந்த கல்விக் கண்காட்சி அண்மையில் நடைபெற்றபோது கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட மாணவர்களின் ஆக்கங்களை தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. இராதாகிருஷ்ணன், ஆசிரிய ஆலோசகர் வி. தனிநாயகம், கல்லூரி அதிபர் அருட்சகோதரி சூ. இக்னேசியா ஆகியோர் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். *(படம்: நெடுந்தீவுச் செய்தியாளர்).*

# சின்னையா கவிதாவின்
## ஏழாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 16 - 12 - 1980



உதிர்வு 02 - 09 - 1997

### அமரர் சின்னையா கவிதா

திதி: 15.09.2004

ஆண்டேழு சென்றும்
ஆறவில்லை எம் துயரம்
மாண்டு நீ சென்றாலும் மறக்கமுடியவில்லை
கவி உன் நினைவை
கற்பனைகள் பலவுடனே- நீ
கண்ணாக வாழ்ந்த போதும்
கலைந்த கற்பனைகளுடன்- கவி
கடவுளுடன் சென்றீரே அம்மா!
உன் பிரிவால் வாடுகின்றோம்
அம்மா, அப்பா, அன்பு உறவுகள்!

உன் பிரிவால் வாடும்: அம்மா, அப்பா
அண்ணன்மார் - சி.திருமாறன் - சுவிஸ்,
சி.திருமாவளவன் - சுவிஸ்,
அக்காமார் - ந.திருமலர் - லண்டன்,
ம.திருமகள் - ஜேர்மனி,
தெ.திருவளர்ச்செல்வி - ஜேர்மனி
அத்தான்மார் - ம.நவநீதன் - லண்டன்
அ.மகிழ்ரூபன் - ஜேர்மனி
பெ.தெய்வேந்திரம் - ஜேர்மனி
அண்ணிமார் - தி.கல்யாணி - சுவிஸ், தி.சர்மிளா - சுவிஸ்
பெறாமக்கள் - ந.திவாகர் - லண்டன்,
ந.சிவன்ஜா - லண்டன், ந.பானுஜா - லண்டன்
ம.ஓவியா (சுயோல்) - ஜேர்மனி, ம.ஆதவன் - ஜேர்மனி,
தெ.ஆகாஷ் - ஜேர்மனி,
மருமகள் - தி.கவிஸ்சனா - சுவிஸ்.

*தி.சின்னையா - தந்தை*
*"கவிதாலயா"*
*இல.06, நொத்தாரிஸ் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*

(36324)(39-11-18-24)

**புனரமைப்புப் பணிகள்**

தெல்லிப்பழை, செப்.15

'நிகொட்' நிறுவனத்தினர் நாவற்குழி, கைதடி ஆகிய பகுதிகளில் சுமார் 20 லட்சத்து 70 ஆயிரம் ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

நாவற்குழி அற்புதமாதா சனசமூக நிலைய வீதி புனரமைப்பு, கைதடி நவீல்ட் பாடசாலை வீதி. புனரமைப்பு, நாவற்குழி அற்புத மாதா சனசமூக நிலையம் நிர்மாணித்தல், கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலய வகுப்பறைக் கட்டடப் புனரமைப்பு ஆகியவற்றுக்கு இந் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# கேள்வி கோரல்

## யாழ்ப்பாணத் தொல்லியல் நூதனசாலைக் கட்டடத் திருத்தவேலை

மேலே குறிப்பிடப்படும் வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் ICTAD இல் பதிவுசெய்யப்பட்ட M-8 தரத்திலுள்ள இலங்கைக் கட்டட ஒப்பந்தகாரர் சங்க அங்கத்தவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் இச்செயலகத்தில் ரூபா1000/- மீளளிக்கப்படமுடியாத கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட கேள்விப் படிவத்தில் இணைப்பிரதிகளில் 2004.09.24ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவங்களை 2004.09.22ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகளை "அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" என முகவரியிட்டுப் பதிவுத்தபால்மூலம் அனுப்பிவைக்கலாம் அல்லது நேரடியாகத் தலைமைப்பீட உதவி அரச அதிபரின் அறையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியிலிடலாம். கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "யாழ். தொல்லியல் நூதனச் சாலைக் கட்டடத் திருத்தம்" எனக் குறிப்பிடப்படவேண்டும். காலதாமதமாகச் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேலதிக விவரங்களை மாவட்டச் செயலகத்தில் தலைமைப்பீட உதவி அரச அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

செ.பத்மநாதன்
அரச அதிபர், யாழ். மாவட்டம்.

(சி-37613)(34-11-18-24)

# நெஞ்சகலாத நினைவஞ்சலி

| பதின்மூன்றாவது ஆண்டு | முதலாம் ஆண்டு |
| --- | --- |
|  |  |
| அமரர் முருகன் மாணிக்கம் | திருமதி மாணிக்கம் செல்லம்மா |

10.08.1932 ← மண்ணில் → 10.08.1937
15.04.1991 ← விண்ணில் → 28.08.2003

அன்பால் எம்மை அணைத்து, அறிவால் எம்மை உயர்த்தி, பண்பால் போற்றிட வாழ்ந்திட்ட எம் தெய்வங்களே! எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சிலே என்றும் நிலைத்திருக்கும்.

*அரசடி வளவு,*
*இமையாணன் கிழக்கு,*
*உடுப்பிட்டி.*

- குடும்பத்தினர்.

(36335) (2411-18)


## சூரியன் கேட்டால்
# ரூபா. 50,000
நாள்தோறும். காலை 07.00 முதல் காலை 10.00 வரை.

சூரியன் FM
SOORIYAN FM
93.0 FM
யாழ்ப்பாணம்
A member of the ABC Radio Network
LEO BURNETT
103.2 கொழும்பு / தெற்கு 93.0 யாழ்ப்பாணம் 97.3 கண்டி / ரஜரட்ட 97.9 நாடு முழுவதும்.

# தேசியமட்ட உடற்பயிற்சிப் போட்டியில் இராமநாதபுரம் அ.த.க.மூன்றாமிடம்!

## பங்குபற்றிய மாணவர்களுக்கு பாடசாலையில் வரவேற்பு

வட்டக்கச்சி,செப்.15

பாடசாலைகளுக்கிடையிலான 11ஆவது தேசியமட்ட விளையாட்டுப்போட்டியில் பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை அணி மூன்றாமிடத்தைப் பெற்று வெணகலப் பதக்கம் வென்றுள்ளது.

மேற்படி போட்டி கடந்த 4ஆம் திகதி வத்தளை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் முதலாம் இடத்தினை களுத்துறை மகளிர் வித்தியாலயமும், 2ஆம் இடத்தினை வவுனியா றம்பைக்குளம் மகளிர் வித்தியாலயமும், 3ஆம் இடத்தினை கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையும் பெற்றுக்கொண்டன.

இதில் 2ஆம், 3ஆம் இடங்களை வடக்கு - கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்த தமிழ்ப் பாடசாலைகள் பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையானது தரம் 11 வரையுள்ள IIஆம் வகைப் பாடசாலையாக இருந்தபோதிலும் கடந்த பல வருடங்களாக கிளிநொச்சி மாவட்ட மட்டப் போட்டிகளில் முதலாம் இடத்தினைப் பெற்றுச் சாதனை படைத்து வருகின்றது.

2002ஆம் ஆண்டில் மாகாண மட்டப் போட்டியிலும் தேசிய மட்டப் போட்டியிலும் முதலாம் இடத்தினைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தினை வென்று சாதனை படைத்தது.

2003 ஆம் ஆண்டில் மாகாண மட்டப் போட்டியில் தெரிவாகி தேசியமட்டப் போட்டியில் 5ஆம் இடத்தினைப் பெற்றது. இவ்வாண்டு வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது.

இப்பாடசாலையில் உடற்கல்வி ஆசிரியர் கூட இல்லாதநிலையில் விஞ்ஞானப்பாட ஆசிரியை திருமதி நளாயினி ஜெயபாலசிங்கம், நடன ஆசிரியையான செல்வி பாமினி ஆகியோரது இணைந்த வழிநடத்தலில் இச் சாதனை நிகழ்த்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

வெண்கலப் பதக்கம் வென்று ஊர் திரும்பிய பாடசாலை மாணவர்களுக்கு மாபெரும் வரவேற்பு நிகழ்வு கடந்த 7ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்றது.

போட்டியில் பங்குபற்றிய மாணவர்களையும், அவர்களுடன் வந்த அதிபர் சி.பாலகிருஷ்ணன், பயிற்சி ஆசிரியர்களான திருமதி நளாயினி ஜெயபாலசிங்கம், செல்வி பாமினி ஆகியோரை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் வித்தியாலய பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் வட்டக்கச்சிச் சந்தையடியில் இருந்து பாடசாலைவரை அழைத்துச் சென்றனர்.

வித்தியாலய மண்டபத்தில் ஆசிரியர் மா.அகிலநாயகம் தலைமையில் வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது.

வரவேற்புரையினை உப அதிபர் திருமதி முத்துலிங்கம் நிகழ்த்தினார். சிறப்புரைகளை கிளிநொச்சி வலய ஆங்கிலப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.தனராஜா, வித்தியாலய அதிபர் சி.பாலகிருஷ்ணன், வட்டக்கச்சிப் பிரதேச காவல் பணிமனைப் பொறுப்பதிகாரி சுந்தர், அணியின் தலைவர் செல்வி றமா, பயிற்சி ஆசிரியர் திருமதி நளாயினி ஜெயபாலசிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இறுதியாக பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் இராஜேந்திரம் நன்றியுரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வினைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். பிரதேச மக்கள் வெடிகொளுத்தி, இனிப்புப் பண்டங்களைப் பரிமாறி வெற்றியைக் கொண்டாடியதையும் காணமுடிந்தது. (4-405)

## திலீபன் மருத்துவமனையில் வைத்தியர் சேவை

புதுக்குடியிருப்பு, செப்.15

அலம்பில் பிரதேசத்தில் இயங்கிவரும் தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில் லண்டனில் இருந்து வருகைதந்த வைத்திய கலாநிதி பொன்னம்பலம் கந்தசாமி கடந்த 9ஆம் திகதி முழுநாளும் நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தார்.

யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் தற்போது லண்டனில் வசித்து வருகிறார். தனது சேவையை தமிழீழ மக்களுக்கு வழங்கவேண்டுமென்ற ஆர்வத்துடன் வந்தார் என்று அவர் தெரிவித்தார்.

இதில் ஏராளமான நோயாளர்களுக்கு அவர் சிகிச்சை அளித்தார். (4-353)

# கிளிநொச்சி தொழில்நுட்ப நிறுவனத்தில் 'உழைக்கக் கற்றல்' பாடநெறி ஆரம்பம்

வட்டக்கச்சி,செப்.15

"வடகிழக்கு நிர்மாணிகள் வட்டமேசை" எனும் அமைப்பு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் (UNDP) சமாதானத்துக்கான முதலீடு செய்தல் பிரிவின் ஆதரவுடன் கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் 'உழைக்கக் கற்றல்' (Learn to earn) பாடநெறியொன்றினை ஆரம்பித்துள்ளது.

ஆரம்ப நிகழ்வு கடந்த 6ஆம் திகதி காலை 9மணிக்கு கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தில் தேசிய நிர்மாணிகள் சங்க யாழ்ப்பாணக்கிளைத் தலைவரும் மேற்படி பாடநெறித் திட்டமுகாமையாளருமான இராமதாஸ் தலைமையில் ஆரம்பமானது.

மங்கள விளக்கினை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், வணபிதா றெஜினோல்ட் அடிகளார், யு.என்.டி.பி. பிரதிநிதி றசலன்ட் சன்சைன், பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் திலக் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ நிர்வாக சேவையின் துணைப்பொறுப்பாளர் இளஞ்சேரன் ஏற்றிவைக்க, தொழில்நுட்பக் கல்வி நிறுவனக் கொடியினை நிறுவன அதிபர் தி.பிரபாகரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து சிறப்புரைகளை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், சிரான் திட்டப்பணிப்பாளர் இரேனியஸ், செல்வின் வணபிதா றெஜினோல்ட் அடிகளார், றசலன்ட் சன்சைன், இளஞ்சேரன், அதிபர் தி.பிரபாகரன், பொருண்மிய மதியுரையக இயக்குநர் ம.சுந்தரமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து அரச அதிபர் பயிற்சியாளர்களுக்கான பாடநெறிப் பொருள்களை வழங்கி வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

வடகிழக்கு உள்ளூர் ஒப்பந்தக்காரரது வேலையாள் அணியினரில் பயிற்சி வேலையானோருக்கே இப்பயிற்சி வழங்கப்பட்டுகின்றது. இப்பயிற்சியில் 40 பயிற்சியாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

நான்கு மாதங்களைக் கொண்ட இக் கற்கை நெறியில் பயிற்சி பெறுவோருக்கு நாளுக்கு 400ரூபா வீதம் சம்பளம் வழங்கப்படுவதோடு, பயிற்சி முடிந்ததும் ஒருவருடம் பயிலுநர் என்ற அடிப்படையில் ஒப்பந்தகாரர் சம்பளம் வழங்க உறுதியளித்துள்ளனர். (4-405)

# விசுவமடு அதிசய விநாயகர் பெருந்திருவிழா ஆரம்பம்

விசுவமடு,செப்.15

விசுவமடு அருள்மிகு அதிசய விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 9ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

17ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர் உற்சவமும் 18ஆம் திகதி 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். 19ஆம் திகதி இரவு 7 மணிக்கு சமய அறிவுப்போட்டிகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

விசேட நிகழ்வாக தினமும் இரவு 7 மணிக்கு சமய சொற்பொழிவுகளும் இடம் பெற்றுவருகின்றன. (4-402)

## நந்தவனப் பிள்ளையார் அலங்கார உற்சவம்

வட்டக்கச்சி,செப்.15

இராமநாதபுரம் அருள்மிகு ஸ்ரீ நந்தவனப் பிள்ளையார் ஆலயத்தில் வருடாந்த அலங்காரத் திருவிழா நடைபெற்று வருகிறது. கடந்த 6ஆம் திகதி இவ்உற்சவம் ஆரம்பமாகியது.

நேற்றுமுன்தினம் வேட்டைத்திருவிழாவும், இன்று சங்காபிசேஷகமும் அதனைத் தொடர்ந்து தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது. நாளை வைரவர் திருவிழாவும் மறுநாள் விநாயகர் சதுர்த்தியும் இடம்பெறும். (4-405)




## உதவி அரச அதிபர் புதிதாக நியமனம்

பூநகரிப் பிரதேசத்தின் புதிய உதவி அரச அதிபராக மாணிக்கவாசகர் சிறிஸ்கந்தகுமார் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 8ஆம் திகதி தொடக்கம் இவர் தனது பொறுப்புகளை ஏற்றுச் செயற்படத் தொடங்கியுள்ளார். (4-403)

# நெடுங்கேணி தபாலகத்தை மீண்டும் இயக்கக் கோரிக்கை

ஒட்டுசுட்டான்,செப்.15

நெடுங்கேணி - மருதோடையில் இயங்கி வந்த தபாலகத்தை மீண்டும் இயக்கவைக்க வேண்டுமென மருதோடை மக்கள் கேட்டுள்ளனர்.

1984 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் அழிக்கப்பட்டும் இதுவரை மருதோடைக்கான தபாலகம் இயங்குவதற்கான நடவடிக்கை மேற கொள்ளப்படாததால் அப்பகுதி மக்கள் பெரிதும் அவதியடைகிறார்கள்.

இதனால், மீண்டும் மருதோடையில் தபாலகத்தை இயங்கவைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (4-341)

# கோரக்கன்கட்டு கிராம மக்களுக்கு இப்போது குடிதண்ணீர் கிடைக்கிறது

## உதயன் செய்திக்குப் பலன்

பரந்தன்,செப்.15

கடுமையான வரட்சியின் காரணமாக கோரக்கன்கட்டு கிராமத்தில் ஏற்பட்டிருக்கும் தண்ணீர்த் தட்டுப்பாட்டினைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகத்தின் பணிப்பின்பேரில் இப்பகுதி மக்களுக்குத் .'பவுஸர்' மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

தினமும் இரண்டு தடவைகள் வீதம் இப் பவுஸர் மூலம் நீர் விநியோகிக்கப்படுகின்றது.

- இவ்வாறு விநியோகிக்கப்படும் தண்ணீரைப் பெறுவதற்காக பாத்திரங்களை அடுக்கிவிட்டு மக்கள் வரிசையில் காத்திருப்பதையே படத்தில் காண்கிறீர்கள்.

வரட்சி காரணமாக மேற்படி பகுதியைச் சேர்ந்த மக்கள் குடிதண்ணீருக்கு அல்லோல கல்லோலப்படுகின்றனர் என்ற செய்தி அண்மையில் உதயனில் வெளியாகியிருந்தது.

இந்தச் செய்தியைத் தொடர்ந்து தமக்கு பவுஸர் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் - இதனால், உதயனுக்கு தாம் மிகுந்த நன்றி தொவிப்பதாகவும் இப்பகுதி மக்கள் எமது செய்தியாளரிடம் கூறினர். (4-352)


'பவுஸர்' மூலம் வழங்கப்படும் குடிதண்ணீரைப் பெறுவதற்கு கொள்கலன்களுடன் வரிசைகளில் நிற்கும் மக்கள்.

# சேமிப்புக் கடன் குழுவுக்கு 'கெயர்' நிறுவனம் நிதியுதவி

பரந்தன்,செப்.15

கிளிநொச்சி - கல்மடுநகர் கிராமத்திலுள்ள "நந்தவனம்" சேமிப்பு கடன் வழங்கும் குழுவினருக்கு கெயர் நிறுவனத்தினால் ஒருலட்சத்து 17ஆயிரத்து 500ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்பட்டுள்ளது.

சிக்கனக் கடன்வழங்கும் குழுத்தலைவி திருமதி இரத்தினேஸ்வரியிடம் கெயர் நிறுவன உத்தியோகத்தர் சிவாஜினி காசோலையை வழங்கினார்.

இந்நிகழ்வில் கெயர் நிறுவனத்தைச் சேர்ந்த செல்வி ரஜனி மற்றும் நந்தவனம் கடன்வழங்கும் குழுவினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (4-352)

# முள்ளியவளைப் பாடசாலையில் புதிய கட்டடம் திறந்துவைப்பு

புதுக்குடியிருப்பு,செப்.15

முள்ளியவளை றோ.க.த.க. பாடசாலையில் 'நிகொட்' திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

முதல் நிகழ்வாக பிரதம அதிதிகள் மங்கள வாத்தியஇசையுடன் அழைத்துவரப்பட்டனர்.

மங்கள விளக்கினை முல்லைமாவட்ட அரச அதிபர் திருமதி எமில்டா சுகுமார், முளளியவளை பங்குத்தந்தை அருட்திரு. யூட் அமலதாஸ் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

பொது ஈகச்சுடரினை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமாரன் ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் ஏற்றிவைத்தார்.

பாடசாலைக் கொடியினை அதிபர் ச.தெட்சணாமூர்த்தி ஏற்றினார்.

தொடர்ந்து கட்டடத்தின் பெயர்ப்பலகையினை வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

புதிய கட்டடத்தினை வடக்கு - கிழக்கு மாகாண 'நிகொட்' திட்டப்பணிப்பாளர் ரி.லங்கா நேசன் திறந்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து அதிபர் தலைமையில் ஆரம்பமான நிகழ்வுகளில் வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா, யூட் அமலதாஸ் அடிகள், மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், வே.இளங்குமாரன் ஆகியோர் உரையாற்றினர். (4-353)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

HI 6xxx தொடர் இலக்கமுடைய குவாட்டா லான்மாஸ்ரர் விற்பனைக்குண்டு. தொடர்பு: K.பத்மநாதன், டச்சு றோட், மானிப்பாய் (மருதடி விநாயகர் சனசமூக நிலையத்திற்கு அருகில்). (36387)

## காணி விற்பனைக்கு

பெரிய கடை, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதிக்கு அருகில் பழைய மீன்சந்தைக்கு பின்னால் உள்ள நாலு பரப்பு 5.39 குளி வெற்றுக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:சி.சி.நாதன், NO.16/3, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.T.P.:077 6146434. (36337)

## மணமகன் தேவை

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1968 இல் பிறந்த, அத்தம் நட்சத்திர ஆசிரியைக்கு B.A. (Dip.in Ed.) அரசாங்க/அரச கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்யும் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இலக்கம் 2370, c/o உதயன், யாழ்ப்பாணம். (36243)

## மணமகள் தேவை

யாழ். கௌரவ குடும்பம் 1973 ரேவதி மீன ராசி 1 இல் செவ்வாய், 6 அடி ஏரோனிற்றிக்கல் எஞ்சினியர் PHT படித்து உயர்பதவியிலுள்ள அழகான பிரிட்டிஷ் குடியுரிமையுடைய மணமகனுக்கு அழகான டாக்டர் மணமகள் தேவை. U.K. விரும்பத்தக்கது. தொடர்பு: S.K.சிவகரன், D.F.T, "சிவாலயா", 68/15, சட்டநாதர் வீதி (சமுர்த்தி வங்கி அருகில்), நல்லூர்.T.P.021-222 7844 (அலுவலக நேரம் 8.30a.m.-5.30p.m.). (36414)

## இலகு திருமணசேவை

எம்மிடம் உள்ளூர், வெளியூர் மணமக்கள் சகல தரங்களிலும் உண்டு. தொடர்புக்கு யாழ்ப்பாணத்துக்குப் பதிலாக 16, அலக்சாண்டர் வீதி, வெள்ளவத்தை. Tel.:2500044 படங்களை பெறவிரும்புகிறவர்கள் 15, 16 ஆம் திகதிகளில் வரவும். துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (36405)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர்-01 பகிரா புறொயிலர் குஞ்சுகள் இன்று மாலை (15.09.2004) விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P.:3529, ரஞ்சித் 517, ஸ்ரான்லி றோட், ஸ்ரீராம்-பருத்தித்துறை பஸ்நிலையம் முன்பாக, ராதா, மாவடி, வட்டுக்கோட்டை, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (36379)

ஒறியினல் பிறிமா இறைச்சிக் குஞ்சுகளும், பேட்டுக்குஞ்சுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (36380)

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலைகள் செய்வதற்கும், இரண்டு வயதுடைய குழந்தையைப் பராமரிப்பதற்கும் பெண் ஒருவர் தேவை. சகல வசதிகளும் அளிக்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: க.உமாசங்கர் (விரிவுரையாளர்), 3ஆம் மைற்கல், பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (நல்லூர் பிரதேச சபைக்கு முன்பாக உள்ள ஒழுங்கையில்) (36412)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

13.09.2004 நல்லூரில் சிறுதொகைப் பணத்துடன் சிறிய கைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் P.உமைகுமரன் or சங்கர், கைதடி தென்கிழக்கு, (பிள்ளையார் கோயில் வீதி) எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (36413)

## விற்பனைக்குண்டு

மோட்டார் வண்டி மொறிஸ் மைனர் கார் EN 1371.
தொடர்பு:
திரு. பொ.இராஜரத்தினம்,
செயலாளர்,
சிவதொண்டன் சபை,
434, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
(36407)

## அவசர கலந்துரையாடல்

மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்து வெளியேறிய கடல்வளத் தொழில்நுட்ப ஆசிரியர் போட்டி பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 10மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த அவசர கலந்துரையாடலில் சம்பந்தப்பட்டவர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு நீர் உயிர்வள ஆசிரியர் சங்கத்தின் தலைவர் கே.பரமேஸ்வரன் கேட்டுள்ளார். (8-13)

## ஏப்ரலில் திரும்பிய அகதிகளுக்கு உதவி

தமிழகத்தில் இருந்து கடந்த ஏப்ரல் 15ஆம் திகதிக்குப் பின்னர் நாடு திரும்பிய அகதிகளுக்கு புலம்பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பு (ஐ.ஒ.எம்.) பல்வேறு வகையான உதவிகளை வழங்கிவருகின்றது. குறிப்பிட்ட இந்தத் திகதிக்குப் பின் திரும்பியவர்கள் 'கோயில் வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரியில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.(3)

## தாக்கப்பட்ட இளைஞன் மயக்கமுற்றார்

ஆலய வீதியில் சென்ற இளைஞர் ஒருவர் இளைஞர் குழு ஒன்றினால் தாக்கப்பட்டு மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை இரவு 8 மணியளவில் நல்லூர் ஆலயத் தெற்கு வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றது. ஆலய உற்சவம் முடிவடைந்து வீட்டுக்குச் செல்லும்போது இந்த இளைஞனை இளைஞர் குழு ஒன்று தாக்கியதைத் தொடர்ந்து மயக்கமுற்ற நிலையில் இருந்த இவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (10-86)

## தமிழகப் பேராசிரியர்களின் சிறப்புரைகள் ஸ்கந்தாவில்

தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகப் பேராசிரியர் இரா.மோகன் மற்றும் மதுரை செந்தமிழ்க் கல்லூரி பல்கலைக்கழகப் பேராசிரியை கலாநிதி திருமதி நிர்மலா மோகன் ஆகியோர் இன்று புதன்கிழமை காலை 9மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சிறப்புரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் தொடக்கவுரையுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்ச்சியில் பேராசிரியை கலாநிதி திருமதி நிர்மலா மோகன் 'சொல்லடி சிவசக்தி' என்ற தலைப்பிலும், பேராசிரியர் இரா.மோகன் 'பாரதி எதிர்பார்த்த சமுதாயம்' என்ற தலைப்பிலும் சிறப்புரைகளை வழங்குவர். இந்நிகழ்வில் ஆர்வலர்கள் யாவரும கலந்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-201)


## இணைய, இணையத்தள சேவை

.com .net .org .info
Doman Registration Rs.400/= per Year
Hosting upto Rs.2000/= per year
Limited time offer
SAAMSTECH, 841, Hospital Road, Jaffna.
T.P.: 0773 068968. (சி-37510)
(34771)

## SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் ரூபா 6000, சிங்களம் ரூ.4000/= முழுமையாகக் கதைக்கலாம்.
SAAMSTECH
841, Hospital Rd., Jaffna.
Phone: 0773068968.
(சி-37511)

## நிதானம் - நம்பிக்கை


வீடுகள், காணிகள், கடைகள், தோட்டங்கள் என்பன விற்க விரும்புகின்றீர்களா? வாங்க விரும்புகின்றீர்களா? எதற்கும் என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்பு:
ந.செல்லத்துரை
இல.11, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
(36200) T.P.: 6358 (21-12-18)

## இணையத் தளம் ஊடாக 24 மணி நேரமும் உலகெங்கும் ஒலிக்கிறது

WORLD TAMILAR
உலகத் தமிழர் வானொலி

இணைய முகவரி: WWW.Wtrfm.com
அதன் ஒரு வருட பூர்த்தியைச் சிறப்பிக்க
நல்லூர் திருவிழாக்கால நேரடி ஒலிபரப்பு
26 உற்சவ நாள்களிலும்
(ஒகஸ்ட் 21 முதல் செப்ரெம்பர் 16 வரை)
உலகின் எந்த மூலையிலிருந்தும் இணையத்தளம் மூலம் செவிமடுத்து மகிழலாம்).
உலகத் தமிழர் வானொலியுடன்
நேரடியாக இணைய
MSN messenger chat மூலம்: live @ wtrtm.com
தொலைபேசி மூலம்: 2673969
(சி-36863)
உலகத் தமிழர் உறவுப் பாலமாக
உலகத் தமிழர் வானொலி
ஊடக அனுசரணை: 'உதயன்'

## "எற்கின்ஸ் வென்ஸ் ஓவசீஸ் ரவல்"

(C/36355)

24 மணி நேர சேவை
0777 915824/270452
தென் இந்தியாவில் நீங்கள் விரும்பும் திருத்தலங்கள் எதுவானாலும் நாங்கள் உங்களை அழைத்துச் செல்வோம்.
(போக்குவரத்து வீசா, தங்குமிட ஒழுங்குகள் உட்பட)
★ உள்நாட்டு வெளிநாட்டு
விமானப் பயணச்சீட்டுக்கள் - குறைந்த செலவில் (ஸ்ரீலங்கன், சிங்கப்பூர் , இந்தியன், எமிரேற்ஸ் எயர்லைன்ஸ் கட்டார் எயர்வேஸ் போன்ற சகல விமானச்சீட்டுக்களும் பெறலாம்)
விபரங்களுக்கு : 56/15 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(யாழ்.பெரிய தபால் கந்தோர் முன்பாக)T.P 021-222-3771

"றோயல்" இன்டஸ்றீஸின் சிறந்த தயாரிப்பு
சுத்தமான றோயல் ஒலிவ் ஒயில் வாங்கிவிட்டீர்களா?
★ உங்கள் சருமத்தை மினு மினுப்பாக்கி மேனியைக் கவர்ச்சியுடையதாக மாற்றுகின்றது.
தோலில் வரும் வியாதிகளுக்கு சிறந்த ஔஷதம்
PRODUCT OF SPAIN
ROYAL 100% சுத்தமான ஒலிவ் ஒயில் OLIVE OIL
PACKED BY : ROYAL Industries Colombo - 12
☎ : 0112334603
அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
(36309)



ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, (சத்திரத்துச் சந்திக்கருகில்) யாழ்ப்பாணம்
☎ 021 222 2567


# கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பியாகிய கவிதாவின் தந்தையாராகிய

## அமரர் தம்பு நவரட்ணம்

அவர்கள் 13.09.2004 திங்கட்கிழமை காலமானதையிட்டு எமது இதய அஞ்சலியை செலுத்துகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நண்பர்கள்,
2ஆம் வருடம் (பொதுக்கலை) நடனத்துறை,
கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்.
(36411)(43-13-18)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் இராசதுரை கனகலிங்கம் (சிட்டு)

அவர்கள் 06.09.2004 திங்கட்கிழமை காலமாகிவிட்டார். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி தெற்கு,
கைதடி. (36410)(43-13-18) வ.சின்னத்தம்பி குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## இராசதுரை கனகலிங்கம்

*(சிட்டு. படப்பிடிப்பாளர்)*



இல.15, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் நாவல்கட்டை லேன், கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை கனகலிங்கம் 06.09.2004 திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை இராசரத்தினம் அவர்களின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும் சுரேஸ்குமார் (பிரான்ஸ்), சதீஸ்குமார் (பிரான்ஸ்), விஜயகுமார் (யாழ்ப்பாணம்), ஜெயக்குமார் (ஜேர்மனி), பிறேம்குமார் (பிரான்ஸ்), ராஜ்குமார் (பிரான்ஸ்), குமுதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவி (பிரான்ஸ்), பபியோன் (பிரான்ஸ்), ஜெனி (பிரான்ஸ்), செல்வராணி (யாழ்ப்பாணம்), றோசி (ஜேர்மனி), வரலக்சுமி (பிரான்ஸ்), பாமினி (பிரான்ஸ்), ஆகியோரின் மாமனாரும் உஷாந்தினி (பிரான்ஸ்), குமுதினி (யாழ்ப்பாணம்), கஜேந்திரன் (பிரான்ஸ்), சஜிந்தன் (ஜேர்மனி), சஞ்சீவி (ஜேர்மனி), வசீஸலா (பிரான்ஸ்), சோபனா (பிரான்ஸ்), கிருபன் (பிரான்ஸ்), கம்ஸ்சி (பிரான்ஸ்), சீமோன் (பிரான்ஸ்), சோபி (பிரானஸ்), சானுகா (பிரான்ஸ்), சந்தியா (பிரான்ஸ்), சாறகேசி (பிரான்ஸ்), சாந்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் அமரசிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரி (கனடா) மற்றும் கமலேஸ்வரி, யோகேஸ்வரி (லண்டன்), சண்முகலிங்கம், காலஞ்சென்ற மகேஸ்வரி, ரெட்ணசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இலட்சுமியின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2004) புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு அன்னாரின் கோப்பாய் இல்லத்தில் நடைபெற்று, கோப்பாய் இந்துமயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாவல்கட்டை ஒழுங்கை,*
*கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.*

தகவல்: மனைவி, மக்கள்.
0777-111467.
(36409)(34-13-18-43)

## திருமதி பொன்னையா யோகரத்தினம் (குருத்து)



நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா யோகரத்தினம் (குருத்து) 11.09.2004 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு பொன்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தா.க.சின்னத்துரை, அப்புத்துரை (பொத்துவில்) மற்றும் இராஜேஸ்வரி (சீனி), பரமேஸ்வரி (வேவி), பாலசுப்பிரமணியம் (பொபி - கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பத்மாவதி, பிரேமாவதி, வசந்தகுமாரி (ஜேர்மனி), ரவீகரன் (77, குறோசறி - கொழும்பு), விஜயகுமாரி (ஜேர்மனி), மனோகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் லோகேஸ்வரன் (டயா வாச்), கணேசன் (ஜேர்மனி), சுப்பிரமணியம் (ஜேர்மனி), இந்திராணி, ஜெயா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2004) புதன்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாமகள் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (36393)(30-13-18-43)

தகவல்:
பொ.ரவீகரன்
(மகன்).

# தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்காக உயிர்நீத்த மாவீரன் தியாகி திலீபன்

**தியாகி லெப்.கேணல் திலீபனின் 17 ஆவது ஆண்டு நிறைவு தின நிகழ்வுகள் இன்று புதன்கிழமை ஆரம்பமாகின்றன. அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**



1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி காலை 10.48 மணியளவில் உலகத் தமிழர்களது மனங்கள் சோகமயமானது. இந்த வையகம் அழுது, வானம் அதிர்ந்து, நல்லூரான் கோயில் மணியும் தனது ஓசையை நிறுத்தியது. தமிழ் மக்களது கண்களில் இருந்து கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியது. 265 மணித்தியாலங்கள் சாகும்வரையிலான தனது உண்ணாவிரதப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்த அந்தத் தியாகத் திலீபன் எம்மையெல்லாம் விட்டுப்பிரிந்து விட்டார்.

திலீபன் என்ற ஓர் இலட்சிய நெருப்பு பாரதத்துடன் தர்மயுத்தம் புரிந்தது. அஹிம்சையைக் கற்றுக்கொடுத்த தேசத்திடமே 5 அம்சக் கோரிக்கையை முன்வைத்து ஒரு துளி நீர் கூட அருந்தாமல் உண்ணா நோன்பிருந்தான். தமிழீழம் எங்குமே அஹிம்சைப் போர் தீப்பிளம்பாக கொழுந்துவிட்டு எரிந்தது. தமிழ் மக்களது கண்முன்னே நல்லூர் வீதியில் அந்த மனிதத் தெய்வம் தன்னை மெழுகாக உருக்கிக் கொண்டிருந்தது. 12 நாள்கள் வரை நகாந்த ஈகப் பயணத்தில் தமிழ் மக்கள் திலீபனையே பார்த்தபடி இருந்தனர். நாளாக நாளாக மக்களது எதிர்பார்ப்பு ஏமாற்றமானது. திலீபன் வைத்த 5 அம்சக் கோரிக்கையை இந்திய அரசு நிறைவேற்றுமா? இதுதான் ஏமாற்றத்துக்குரிய காரணம்.

எங்கள் செல்வமே எங்களுக்காகவேனும் ஒரு சொட்டு நீரையாவது அருந்தமாட்டாயா? எனத் தமிழ்த்தாய்மார்கள் திலீபனை வேண்டினார்கள். ஆனால், பருகுவதற்கு நீரைக் கொடுக்கவில்லை ஏன்?

"அன்பான தமிழீழ மக்களே நீர், உணவு அருந்தும் படி நீங்கள் கேட்பது என்னை அவமானப்படுத்துவதுபோல இருக்கிறது.... நான் இந்த மேடையிலே நீராகாரம் எதுவும் எடுக்காமல்தான் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தேன்.

"இறுதிவரை இந்த இலட்சியத்திலிருந்து மாறமாட்டேன். நீங்கள் இந்தத் திலீபனை நேசிப்பது உண்மையாக இருந்தால் தயவு செய்து இனிமேல் என்னை யாரும் நீராகாரம் அருந்தும்படி வற்புறுத்தவேண்டாம். உங்கள் திலீபனுக்கு நிறைந்த மனக்கட்டுப்பாடும் தன்னம்பிக்கையும் உண்டு. என் கோரிக்கைகளை இந்திய அரசு நிறைவேற்றாவிட்டால் நீரே எடுக்காமல் இறப்பேனே தவிர இந்த அற்ப உயிரைக் காப்பாற்றுவதற்காக என் இலட்சியத்தில் இருந்து ஒருபோதும் பின்வாங்கமாட்டேன்" என்று மேடையில் இருந்தபடி மக்களிடம் திலீபன் அன்பாக வேண்டினான்.

திலீபனை - அவனது போராட்டத்தை - இந்த மண் மதித்தது; மக்கள் அவனை நேசித்தார்கள். மாறாக திலீபனைக் காப்பாற்றும்படி அந்த நல்லூரானையே மனமுருகி தோத்திரம் பாடி வேண்டினார்கள்; வேதனைக் கடலில் மூழ்கினார்கள். யாருக்காக? திலீபனுக்காக. அபபடி இருக்க அந்தக் கண்ணீரை, ஏக்கத்தை யாருமே புரிந்துகொள்ளவில்லையே... திலீபன் அஹிம்சையில் மட்டுமல்ல, துப்பாக்கி ஏந்திப் போராடுவதிலும் வல்லவன். 1986ஆம் ஆண்டின் இறுதியில் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற புலிகள் - இராணுவ மோதலின்போது பல இராணுவத்தினரைச் சுட்டுத்தள்ளினான். ஆனால், அந்த வேளையில்தான் எதிரியின் துப்பாக்கி ரவை ஒன்று அவனின் குடலைச் சிதைத்துவிட்டது. அதனால் அவனின் குடலில் இருந்து 14 அங்குல நீளத்துண்டை இழக்கவேண்டி ஏற்பட்டது. இப்படி எத்தனையோ துன்பங்களைத் தமிழினத்துக்காக அனுபவித்தவர்தான் திலீபன்.

திலீபனது அஹிம்சைப் போரின் செய்தி உலக நாடெங்கும் பரவியது. பல நாடுகளின் பத்திரிகைச் செய்திகளில் திலீபனது உண்ணாவிரதப் போராட்டமே தலைப்புச் செய்தியானது. வேற்று நாடுகள் திலீபனின் நலம் விசாரித்து இந்தியாவையே திரும்பிப்பார்த்தன. இந்தியாவின் தமிழ்நாட்டில் மக்களிடையே உணர்ச்சிக் கொந்தளிப்பு ஏற்பட்டது. ஓரிரு தடவைகள் இந்தியாவில் இருந்து அரசியல் வலுவல்லாத தூதுவர்கள் யாழ்ப்பாணம் வந்து உறுதியற்ற வாக்குறுதி வழங்கினர். திலீபன் ஏற்க மறுத்தான். அவன் தீர்க்கமான - உறுதியான - நிலையான - காத்திரமான முடிவையே எதிர்பார்த்தான்.

நாள்கள் மெல்லமெல்ல இரங்காமல் நகர்ந்தன. மக்கள் திலீபனது உடல் நலத்தில் நம்பிக்கை இழந்தனர். 12ஆம் நாள் திலீபன் என்ற தியாக தீபம் அணைந்துவிட்டது! அது காந்தியத்தைத் தோற்கடித்துவிட்டது.

★

## கணக்காளர் சேவைக்கு 34 தமிழர் தெரிவாகினர்

கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட இலங்கை கணக்காளர் சேவை II - II இற்காக நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

தமிழ்மொழிமூலம் தோற்றிச் சித்தியடைந்த 34 பேரின் விவரம் வருமாறு:-

எஸ்.பிரசாந்தன், எஸ்.கிருபாகரன், எஸ்.பிரேம்குமார், வி.லுகேந்திரன், எல்.ஸ்ரீதரன், பி.கணேஸ், எஸ்.சுந்தரேஸ்வரன், எ.ஜெயக்குமார், வை. கேமா, கே.கங்கா, எம்.ஜி.காண்டீபன்.

கே.சுரேஸ்குமார், எ.கலைச்செல்வன், ஜி.ரூபாகரன், எஸ்.மதன், கே.உதயராசா, எஸ்.குமுதினி, ரி.தயாளினி, எஸ்.எஸ்.பிரதீப்ராஜா

எ.தர்மாம்பிகை, எஸ்.விஷ்ணுகுமார், ரி.சிவரூபன், ஜி.லோகநாதன், கே.கந்தசாமி, கே. அரசரட்ணம், எ.மோகன்ராஜ், எஸ்.புவனேஸ்வரன், எஸ்.குகனேஸ்வரி, எல்.ரி.சித்திரா ரஞ்சன், எஸ்.பிரபாகரன், பி.பி.ஜெயபாஸ்கரன், கே.கே.சந்திரகுமார்.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம் பின்வருமாறு:-

கே.எஸ்.கஜேந்திரன், எ.கலைச்செல்வன், எஸ்.மதன், எல்.ரி.சித்திராரஞ்சன், எம்.செல்வரட்ணம்.

இலங்கை கணக்காளர் சேவை II-II இற்கான போட்டிப் பரீட்சைக்கான வகுப்புகள் சிரேஷ்ட கணக்காளரான மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புப் பிரிவுக் கணக்காளர் செ.நாகராசா யாழ். மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் திணைக்களக் கணக்காளர் க.தரைஞ்சிதராசன் ஆகியோரால் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இலவசமாக நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3-202-204)

## விபத்தில் மரணம்

வாகன விபத்துக்குள்ளாகி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த ஒருவர் நேற்றுமுன்தினமிரவு உயிரிழந்தார்.

பூநகரி, நல்லூர்ப் பகுதியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் விமலச்சந்திரன் (வயது 31) என்பவரே உயிரிழந்தவராவார். கடந்த 10ஆம் திகதி பூநகரியில் இடம்பெற்ற டிராக்ரர் விபத்தில் சிக்கிய இந்நபர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். (3-15)

# மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் -2004

## கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பு பாகிஸ்தான் அணிக்கு உண்டு

### வசிம் அக்ரம் நம்பிக்கை

பாகிஸ்தான் அணிக்கு இது ஒரு சாதகமான தொடர். இம்முறை கிண்ணத்தைக் கைப்பற்றும் வாய்ப்புகள் உள்ள அணிகளுள் பாகிஸ்தானும் ஒன்று என பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் வசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

இளம் வீரர்கள்தான் அந்த அணியின் பலம். குறிப்பாக யாசிர் ஹமீட் கவனிக்கப்படவேண்டிய வீரர்.

கென்யாவுக்கு எதிரான ஆட்டம் பற்றி அதிகம் கவலைப்படத் தேவையில்லை. பாகிஸ்தான் அணிக்கு நிஜமான சவால் என்றால் 19ஆம் திகதி நடக்கும் இந்தியாவுக்கு எதிரான போட்டிதான். அரையிறுதிக்கு எந்த அணி செல்வது என்பதைத் தீர்மானிக்கும் ஆட்டம் இது.

தனிப்பட்ட முறையில் என்னைக் கேட்டால் பாகிஸ்தானுக்கு வாய்ப்புகள் சற்று அதிகம் என்பேன். ஆனாலும் அன்றைய தினம் இரு அணி வீரர்களின் ஆட்டத்தைப் பொறுத்தே முடிவுகள் இருக்கும். அரையிறுதிக்கு வந்து விட்டால் போதும் சம்பியன் கிண்ணத்தை வெல்லக்கூடிய வாய்ப்பு பாகிஸ்தானுக்கு இருக்கிறது. பாகிஸ்தான் அணியின் இளம் வீரர்கள் அப்படி ஒரு சந்தர்ப்பத்திற்காகத்தான் காத்திருக்கிறார்கள் என்றார் அக்ரம். (10)

**இன்றைய போட்டிகள்**

மேற்கிந்தியா எதிர் பங்களாதேஷ்

## அமெரிக்க அணி 65 ஓட்டங்களுக்கு ஆஸ்திரேலிய அணியிடம் சுருண்டது

ஆஸ்திரேலிய - அமெரிக்க அணிகளுக்கிடையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற மினி உலகக்கிண்ணப் போட்டியின் ஐந்தாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுள்ளது.

நாணயச்சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலிய அணி, அமெரிக்க அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு கேட்டுக்கொண்டது. இதற்கமைய முதலில் களமிறங்கிய அமெரிக்க அணி, ஆஸ்திரேலிய அணியின் பந்து வீச்சுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்தது.

அந்த அணியின் சார்பில் ஸ்ரீவ்மஸயா மட்டும் ஒருவாறு தாக்குப்பிடித்து 23 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். இதனால் அமெரிக்க அணி 24 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 65 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

ஆஸ்திரேலிய அணியின் சார்பில் மைக்கல் கஸ்பரோவிச் 14 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், ஜேசன் கிலெஸ்பி 15 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். மிகவும் குறைந்த எண்ணிக்கையான 66 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 7.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றியீட்டியது. மத்தியூ ஹைடன் 23 ஓட்டங்களையும் கில்கிறிஸ்ட் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆட்டநாயகனாக மைக்கல் கஸ்பரோவிச் தெரிவானார்.

அமெரிக்க அணி பெற்ற 65 ஓட்டங்கள் தான் மினி உலகக்கிண்ண வரலாற்றில் மிகவும் குறைந்த ஓட்டங்களாகும். இதற்கு முன்னர் நியூஸிலாந்து அணிக்கு எதிராக பங்காளாதேஷ் அணிபெற்ற 77 ஓட்டங்களே மிகவும் குறைந்த ஓட்டங்களாக இருந்தது. (10)






## கங்குலி, பதான் ஆகியோருக்கு ஐ.சி.சி. கடும் எச்சரிக்கை

சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் (ஐ.சி.சி.) சார்பில் போட்டிகள் நடத்தப்படும்போது சில விதிமுறைகள் கடைபிடிக்கப்படுகிறது. அதாவது இந்தப் போட்டிகளின் அதிகாரபூர்வ 'ஸ்பொன்ஸர்களுக்கு' எதிராக 45 நாள்களுக்கு, வேறு விளம்பரங்களில் வீரர்கள் தோன்றக்கூடாது என்பதுதான் அது. 2003 உலகக் கிண்ணப் போட்டியின்போதும் இந்தப் பிரச்சினை வெடித்தது. இப்போது மீண்டும் மினி உலகக் கிண்ணத்தில் எழுந்துள்ளது. இம்முறை அதிகாரபூர்வ 'ஸ்பொன்ஸராக' ஹட்ச் மொபைல் நிறுவனம் உள்ளது. இதற்கு எதிரான விளம்பரத்தில் கங்குலி, பதான் இருவரும் நடித்துள்ளனர். விளம்பரங்கள் தற்போது ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

இதுதான் பிரச்சினைக்குக் காரணம். குறிப்பிட்ட நாள்களுக்கு வேறு விளம்பரங்களில் தோன்றக்கூடாது என்ற ஐ.சி.சி. விதிமுறையை கங்குலி, பதான் மீறிவிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதற்கு விளக்கம் கேட்டு இந்திய கிரிக்கெட் சபைக்குக் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. இதுபற்றி சபையின் செயலாளர் எஸ்.கே.நாயர் தெரிவித்துள்ளார். (10)



## வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலைக்கு
அரும்பணியாற்ற வந்த

### அதிபர் தஸ் நெவில்ஸ் லடிஸ்லஸ்

அவர்களை

### அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

கன்னியர்மடம் தன்னில் காத்திர பணிகள் ஆற்ற
தன்னிகர் தலை பெரும் தகை அருட்சோதரி சேர்ந்தார்
மண்ணிலே உய்துவாழ மாணவர் சமூகம் தன்னை
வண்ணமாய் ஆக்கித்தரவே வளர் நெவில்ஸ் சோதரி எம்
எண்ணத்தில் இனிதாய் நல்ல ஏற்றமே காட்ட வந்தார்
திண்ணமாய் ஆளுமை, அன்பும் திகழ் உயர் சமூக உறவும்
உன்னத உங்கள் பணியால் உயருமே திருக்குடும்பம்.

(36399)(42-21-18) - நலன்விரும்பிகள் -

## வேலைத்திட்டங்களுக்கான முன்மொழிவுகள் தேவை

கைதடி,செப்.15

சாவகச்சேரிப் பிரதேச சபையினால் 2005ஆம ஆண்டு மேற்கொள்ளப்படவேண்டிய மிக முக்கியமானதும் முன்னுரிமை அடிப்படையிலுமான வேலைத்திட்டங்களை இனம்கண்டு அது சம்பந்தமான விவரங்களைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர், செயலாளர்களை சாவகச்சேரிப் பிரதேச சபையின் செயலாளர் நா.பாலச்சந்திரன் கடித மூலம் கேட்டுள்ளார்.

புனரமைக்கப்பட வேண்டியதும், புதிதாக அமைக்கப்படவேண்டியதுமான சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள், மயானங்கள், குடிநீர்க் கிணறுகள் மற்றும் பொதுவீதிகள் ஆகியவற்றின் பூரண விவரங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (10-75)

## தனியார் ஒலிபரப்புச் சேவை

வடமராட்சி,செப்.15

நெல்லியடி பட்டினப் பகுதியில் தனியார் விளம்பர ஒலிபரப்புச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒலிபரப்புச் சேவைக்கு கரவெட்டி பிரதேசசபை அனுமதி வழங்கியுள்ளது.(10-173)

## பிற்போடப்பட்டுள்ளது

வண்ணை நாவலடி பேச்சியம்மன் ஆலயக் கட்டட நிதிக்காக இந்து இளைஞர்களால் நடத்தப்படும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு இன்று (15-09-2004) நடைபெறவிருந்த சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் (14-01-2005) தைப் பொங்கல் தினத்தன்று நடைபெறும்.

க.சுதந்திரராஜா
செயலாளா.

(36420)(21-18)



*கொக்குவில் மேற்கு சொர்ணவடலி*

### அருள்மிகு ஸ்ரீ சொர்ணசித்தி விநாயகர் தேவஸ்தான

புனராவர்த்தன பிரதிஷ்டா நவ(9) குண்டபக்ஷ
உத்தம மஹாயாக சம்புரோகண அஷ்டபந்தன

## மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கர்மாரம்பம்: ஆவணித் திங்கள் 25ஆம் நாள் 10.09.2004
வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி

எண்ணெய்க்காப்பு: ஆவணித்திங்கள் 30ஆம் நாள் 15.09.2004
புதன்கிழமை காலை 10.00மணிமுதல்
மாலை4.00மணிவரை

மஹாகும்பாபிஷேகம்:
ஆவணித்திங்கள் 31ஆம் நாள் 16.09.2004
வியாழக்கிழமை காலை 7.30மணிமுதல்
8.30 மணிவரையுள்ள சுபவேளையில்
கும்பாபிஷேகம நடைபெறும்

மஹாகும்பாபிஷேக சர்வபோதகர்:
சிவாகம ஞானபாஸ்கரன்
பிரம்மபத்.தா.மகாதேவக்குருக்கள்

மஹாகும்பாபிஷேக: பிரதிஷ்டா பிரதமகுரு:
சிவாகம கிரியா வித்வசிரோன்மணி
பிரம்மஸ்ரீ சொ.இரத்தினசபாபதிக் குருக்கள்.
(தேவஸ்தான குரு)

தேவஸ்தான குரு: ஈசான சிவாச்சாரியார்
பிரம்மஸ்ரீ சொ.இ.விக்கினேஸ்வரக்குருக்கள்.

நிர்வாக சபையினரும்
உபயகாரர்களும்.

*சொர்ணவடலி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

(36415)(42-21-18)

## திருமண அழைப்பு

உ

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் ஆவணி மாதம் 30ஆம் நாள் இன்று (15.09.2004) புதன்கிழமை பிற்பகல் 1.32 மணிமுதல் 2.23 மணிவரையுள்ள ரேவதி நட்சத்திரமும் மிதின லக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு.திருமதி தர்மலிங்கம
அவர்களின் புத்திரன்
திருநிறைசெல்வன்
**சிவா செல்லையா**
அவர்களுக்கும்



திரு.திருமதி சந்திரபாலசிங்கம்
அவர்களின் புத்திரி
திருநிறைசெல்வி
**தர்ஷினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு அன்னங்கை கோண்டாவில் வடக்கு சிவபூதவராயர் ஆலயத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


*இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:*

திரு.திருமதி தர்மலிங்கம்,
திரு.திருமதி இராசையா(J.P.)
நண்பர்கள்,
வதிரி, கரவெட்டி, இலங்கை.

திரு.திருமதி சந்திரபாலசிங்கம்,
கோகில வீதி,
கோண்டாவில் வடக்கு, இலங்கை.
(36408) (26-21-18)

(இதனைத் தயவுசெய்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுவருகை தரவும்)

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



## குணசிங்கம் ஞானேந்திரன்

(கோபிகா ஆடையக உரிமையாளர்,
5/4, நவீன சந்தை, யாழ்ப்பாணம்)

மகிழ்வில்
07—01—1977

துன்பத்தில்
10—09—1999

வேல் சுமந்த வேலவன்
தேர் வந்து போவதெல்லாம்
உன் மேல் சுமந்த வீதியல்லவா!
ஊர் உருகித் தொழுகின்ற
கந்த வேள் கருணைக்குள்
காணாமல் கரைந்தவன் நீயல்லவா
நீவிட்ட இறுதிமூச்சை
நாம் மீட்டு சுவாசிக்கின்றோம்
உன் கால் தொட்ட சுவடுகளில்
தலைவைத்து தூங்குகின்றோம்
உறங்கும் நிமிஷப்பொழுதிலும்
ஒவ்வொரு கவளச் சோற்றிலும்
உயிரின் கணத்தின் துடிப்பிலும்
உறைந்து போனவன் நீயடா!
ஆண்டுகள் ஐந்து தொலைந்தது
இன்னும் - ஆயிரமாயிரமாகட்டும்
மீண்டும் மீண்டும் வாழ்ந்திருப்பாய்
கண்ணா! தோன்றும் ஒவ்வொரு உயிருள்ளும்.

40/6, பூகையிரத கிழக்கு ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(சி37658)(34-21-18)

உனது பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரிகள், மச்சான்மார்,
மருமகள், அம்மம்மா, உறவினர், நண்பர்கள்.

## வருடாந்தப் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,செப்.15

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. (10-24)


Jayoda ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6409451 முதல் 6421909 வரை

சீட்டிழுப்பு இல. 67 திகதி 13-09-2004

வெற்றி எண்கள் 9 3 2 9 6 3 சுப்பர் எண் 19

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,78,00,325/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,78,00,325/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 108 | 5,000/- | 5,40,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,107 | 500/- | 5,53,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,029 | 50/- | 5,51,450/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,09,290 | 10/- | 10,92,900/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 5,000/- | 60,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 112 | 1,000/- | 1,12,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,101 | 100/- | 1,10,100/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,943 | 20/- | 2,18,860/- |
| மொத்தம் | 1,33,714 | | 47,88,810/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 47,88,810/-

இந்த வியாழக்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்

ரூ. 1,81,07,000/-

தொடர் இல. 7380721 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 செப்டம்பர் 16 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

6411251-2-29

6420054-2-52

6409951-2-45

6419303-5-78

6421244-9-42






ஒருமுறை அனுப்பி இருமுறை வெல்லுங்கள்

COSMOS MARKETING SERVICES

இல.200, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 021-222 5461, Fax 2225462



நிர்மலீஸ்சனாஸ் சங்கானை

ரஜனி, நக்மா, ரகுவரன் நடித்த

பாட்ஷா

காட்சிகள்: 11.00, 2.45, 6.00பு.நே.

Return To Two Moon Junction (இரவு 8.45 பு.நே)



வெள்ளி, சனி, ஞாயிறு.



ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த

மதுர



பு.நே.: 10.30, 2.30, 6.30, 9.30

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.



நாகம்ஸ் சுன்னாகம்

தனுஷ், சிந்துதுலானி, கருணாஸ், மணிவண்ணன், நடிப்பில்

சுள்ளான்



(சி-36415) காட்சிநேரம்: 11.00,3.00, 7.00 (புதிய நேரம்)


## பல்கலைக்கழக முன்றிலில் கூடுமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.15

நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத் தப் போராட்டத்தை மேலும் முனைப்பாக முன்னெடுக்கும் வழிவகைகளை ஆராய்வதற்காக யாழ்.பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும் இன்று காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டப முன்றிலில் கூடுமாறு யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கேட்டுள்ளது.

ஆசிரியர், ஊழியர் உள்ளிட்ட சகல பல் கலைக்கழகப் பணியாளர்களுக்குமான புதிய சம்பளத் திட்டம் இதுவரை அமுலாக்கப்படாததைக் கண்டித்து நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக்கழக போதனைசாரா ஊழியர்களால் தொடர்ந்து நடத்தப்பட்டுவரும் வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து அரசு இதுவரை எதுவித பேச்சுக்களையும் நடத்த முன்வராததாலேயே மேற்படி போராட்டத்தை மேலும் முனைப்பாக்குவதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. (10-201)

### ஜே.வி.பி. - ஸ்ரீ.ல.சு.க. ஆதரவாளர்கள் மோதல்

மகியங்கனை நகரில் நேற்றுமுன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களுக்கும் ஜே.வி.பி. ஆதரவாளர்களுக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பில் இருவர் காயமடைந்தனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மகியங்கனைக்கு விஜயம் செய்வதை முன்னிட்டு அங்கு அவரது புகைப்படங்கள் ஒட்டப்பட்டிருந்தன. ஓர் இடத்தில் ஜனாதிபதியின் படத்துக்கு மேலே அதனை மறைக்கும் வகையில் ஜே.வி.பி. செயலாளர் ரில்வின் சில்வாவின் படத்தை ஒட்டியதனாலேயே இரு கூட்டுக் கட்சிகளின் ஆதரவாளர்களிடையே கைகலப்பு ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மகியங்கனைப் பொலீஸ் பொறுப்பதிகாரி மாரப்பன இவ்விடயம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டார்.

(க-3)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பிலிப்புப்பிள்ளை திரேசம்மா



32/6, அச்சக ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பிலிப்புப்பிள்ளை திரேசம்மா 13.09.2004 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிலிப்புப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மரியதாஸ் மற்றும் மேரிமெக்ரலின், அம்லதாஸ் (சந்திரன்), யேசுதாஸன் (கீதன்), இராசநாயகம், மேரிமாகிறெட், ஜோண்மார்க் ஆகியோரின் அன்புத் தாயாரும் சண்முகலிங்கம், அருமைநாயகம், மேரிலூசினா, விக்னேஸ், லலி, ரஞ்சினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி நல்லடக்கத்திற்காக இன்று (15.09.2004) புதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ். பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*32/6, அச்சக ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (36422)(38-14-16)

தகவல்:
பிள்ளைகள்.

## திருமதி அக்னேசம்மா அருளானந்தம்

**(ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியை)**



சென்.தோமஸ் லேன், பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அக்னேசம்மா அருளானந்தம் அவர்கள் நேற்று (14.09.2004) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் பருத்தித்துறையில் இடம்பெறும். திகதி பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்க்ள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'அருள்நேசவாசா'*
*சென்.தோமஸ் லேன்,*
*பருத்தித்துறை.* T.P. 0712318497

தகவல்:
அருட்தந்தை ஞானநேசன் (மகன்)
நற்கருணைநாதர் சபை
(36429)(38-14-16)

## செல்வி மேரிகனிஸ்ரா ஆனந்தறாணி எட்வேட்

காலஞ்சென்ற செல்வி மேரிகனிஸ்ரா ஆனந்தறாணி எட்வேட்டின் நல்லடக்கம் இன்று (15.09.2004) புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலியுடன் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

*33/22, அடப்பன் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (36428)(38-14-16)

தகவல்:
J.T.M. கிறிஸ்ரோப்பர்
(மைத்துனர்)

## அம்பலவாணர் செல்லையா

**(இளைப்பாறிய அதிபர், வேலணை)**



வேலணை கிழக்கு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 117/3, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் இல.10 1/1, வெவசெட் பிளேஸ் (Vaverset Place), வெள்ளவத்தை, கொழும்பைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் செல்லையா அவர்கள் 12.09.2004 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் வேலணை கிராமசபையின் முன்னாள் தலைவரும், வேலணை கிராம இணக்கசபை முன்னாள் தலைவருமாவார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசம்மாவின் கணவரும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் கமலாதேவி (கொழும்பு), லோகநாயகம் (லண்டன்), கிருபாதேவி (கொழும்பு), ஜெயச்சந்திரன் (பிரான்ஸ்), மனோகரன் (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற இராதாகிருஷ்ணன், வரதராஜன் (கொழும்பு), சுகுமாரன் (கனடா), நளினி (லண்டன்), சுதாகரன் (அமெரிக்கா), சாந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத தந்தையும் காலஞ்சென்ற தம்பிராசா, தர்மபுத்திரி, திருச்செல்வம், ஆனந்தலீலா, வாமா, சந்திரா, சுபாஷினி, தவபாலசிங்கம், சுதாமதி, இளஞ்செழியன் ஆகியோரின் அன்பு மாமனாரும் யோகசந்திரன், ஜெயமோகன், கலைச்செல்வன், கலைச்செல்வி, கவிதா, ராகவன், ஆதவன், பிரியங்கா, வினோத், வசிகா, மதுரி, திவ்வியா, கீர்த்தனா, திவாகரன், அர்ஜுன், அரவிந், காயத்ரி, வைதேகி, கார்த்திகா, காருண்ஜா, லாவண்ணியா, ரம்மியா, யதுகுலன், சுபதா, வினுஜன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் பிரவீன், நேகா, ஷைஷானி, ஆஷானி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.09.2004) வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பொரளை கனத்தை இந்து மயானத்தில் 5மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

T.P.:0777-896276
0777-541277 (C/37669)(43-14-16)

தகவல்:
செ.வரதராஜன். கொழும்பு-06

## ஈராக்கில் குண்டு வெடிப்பு 55 பேர் பலி; பலர் காயம்!

பக்தாத்,செப்.15

ஈராக் தலைநகர் பக்தாத்தின் பொலீஸ் நிலையமொன்றின் அருகிலுள்ள சந்தைப்பகுதியில் இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்பில் குறைந்தது 55பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று சம்பவத்தை நேரில் கண்ட செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதில் பலர் படுகாயமடைந்தனர்.

## ஆலயத்தில் அதிசயம்

யாழ்ப்பாணம்,செப்.15

நீர்வேலி, வடக்கு ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் 11ஆம் திருவிழாவான நேற்று வெள்ளை நாகம் ஒன்று தோன்றி படமெடுத்து ஆடிவிட்டு மறைந்துவிட்டது என்று கூறப்படுகிறது.

இந்த அதிசயச் சம்பவம் நேற்றிரவு 10.30 மணியளவில் சுவாமி வீதியுலா வருகையில் நாதஸ்வரகானம் இசைத்தபோது இடம்பெற்றுள்ளது. (9)

# சமாதான முயற்சிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் எரிக் சொல்ஹெய்ம் - ஹான்ஸ் பிரட்ஸ்கர் குழு சந்திக்க ஏற்பாடாகியிருந்தது.

நாளை இக்குழுவினர் விசேட ஹெலிகொப்டரில் கிளிநொச்சி சென்று அங்கு புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவிருக்கிறார்கள்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் லண்டனில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து விரிவாகப் பேச்சு நடத்திவிட்டே சொல்ஹெய்ம் இம்முறை இலங்கை வந்துள்ளார்.

எனினும், அமைதி முயற்சிகளை முன் நகர்த்துவதற்கான வாய்ப்புக்குறித்து அவநம்பிக்கையான மனநிலையுடனேயே அவர் இம்முறை இலங்கை வந்துசேர்ந்தார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தடவை சொல்ஹெய்மின் விஜயத்தின் மூலம் அமைதி முயற்சிகளில் பெரிய மாற்றம் ஏதும் எட்டப்படமாட்டாது என்பதை முதலிலேயே நன்கு உணர்ந்து கொண்டதால் தான் - அவரது வருகை பற்றிய பெரிய எதிர்பார்ப்பு ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் - இந்த விஜயம் எரிக் சொல்ஹெய்மின் வழமையான வருகைகளில் ஒன்று எனக் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எரிக் சொல்ஹெய்ம் மட்டுமல்லாமல் இலங்கையில் அவரைச் சந்திக்கும் ஏனைய அரசியல் தலைவர்கள் பலரும்கூட, இந்தத் தடவை சொல்ஹெய்மின் விஜயத்தால் பலன் ஏதும் கிடடாது என்ற அவநம்பிக்கையுடனேயே சந்திப்பில் ஈடுபடுகின்றனர் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சமாதான முயற்சிகள் முன் நகர்வதற்குத் தீர்க்கமான சில முடிவுகள் அரசுத்தரப்பிலிருந்து மேற்கொள்ளப்படவேண்டும். ஆனால், அதற்கான திடமும், உறுதியும் அரசுப் பக்கத்தில் இல்லாத நிலையில் சமாதான முயற்சிகளில் முன் நகர்வு ஏற்படுவது துர்லபமே என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-க)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல.15,சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.
0777222422, 0777917781
அனைத்து கணனிக் கற்கை நெறிகளுக்கும் 80% புலமைப்பரிசிலைப் பெற்றுக் கொள்ள 30ஆம் திகதிக்கு முன்னர் உங்கள் பதிவுகளை செய்து கொள்ளவும்.
80% OFF

# தமிழ் மக்களோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான - நிலைப்பாட்டையும் நீங்கள் அறிந்து, அவற்றைத் தெற்கு மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும் என்று விரும்புகிறேன்.

தமிழ் மக்களோ, விடுதலைப் புலிகளோ சாதாரண சிங்கள மக்களின் எதிரிகள் அல்லர். சாதாரண சிங்கள மக்களை எமது சகோதரர்களாகவே நேசிக்கின்றோம். தெற்கில் எம்மைக் கொடூரமானவர்களாகச் சித்திரிக்கும் இனவாதிகளை சிங்கள மக்கள் இனங்காண உங்கள் பங்களிப்பை வழங்கவேண்டும்.

சிங்கள மக்கள் எமது மக்களின் அபிலாஷைகளை ஏற்கவேண்டும். சாதாரண சிங்கள மக்கள் எத்தகைய உரிமைகளுடன், எவ்வளவு நிம்மதியுடன், எவ்வளவு கௌரவத்துடன் வாழ்கிறார்களோ அதேயளவு உரிமையுடன், நிம்மதியுடன், கௌரவத்துடன் தமிழ் மக்களும் வாழ வேண்டும்.

அதற்காகவே, தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் போராடுகின்றார்கள். தமது தாயகத்தில் தங்கள் அபிலாஷைகளை நிறைவுசெய்யும் ஏற்பாடுகளுடனும், உரிமைகளுடனும் வாழ்வதற்கு தமிழ் மக்களுக்கும் உரிமையுண்டு.

இந்தச் செய்திகளைச் சாதாரண சிங்கள மக்களுக்கு, சிங்கள ஊடகவியலாளர்களாகிய நீங்கள் தெரிவிக்கவேண்டும்.

உங்கள் ஊடாக இந்தச் செய்தியை தெற்கு மக்களுக்கு விடுக்க நாம் விரும்புகிறோம்.

தெற்கு ஊடகவியலாளர்கள் தொடர்பாக எமக்கு ஏற்பட்டுள்ள கவலையையும், கரிசனையையும் சொல்ல விரும்புகின்றேன்.

தெற்கில் உள்ள சிங்கள, ஆங்கில ஊடகங்கள் எமது செயற்பாடுகள், உரிமைகள் ஆகியன தொடர்பாக முரணான - தவறான - தகவல்களைச் சிங்கள மக்களுக்குத் திணிக்கின்றன. அவை வெளியிடும் கட்டுரைகள், செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை. தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை ஊடகங்களின் அடிப்படையில் வெளியிட்டு எமக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் அவை செயற்படுகின்றன.

எனவே, எமது நியாயப்பாட்டை - தமிழர்களின் நிலைப்பாட்டை - சிங்கள மக்களுக்குச் சரியான முறையில் தெரிவிக்க ஊடகவியலாளர்களாகிய நீங்கள் உதவவேண்டும் - என்றார்.

விடுதலைப் புலிகளின் திட்டமிடலுக்கும், மேம்பாட்டுக்கான செயலகம், நீதிமன்றம், கண்ணி அகற்றும் பிரிவு, வெண்புறா அமைப்பு, தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆகிய இடங்களுக்கும் செய்தியாளர்கள் குழு விஜயம் செய்தது.

இக்குழு நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. (ஐ-க)

# தியாகி திலீபன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைப்பார்.

தொடர்ந்து மலரஞ்சலி, நினைவுரைகள் என்பனவும் இடம்பெறும். இந்த நிகழ்வுகளில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இன்றைய அரசியல் சூழலில், தியாகி திலீபனது மென்முறை தழுவிய உண்ணா நோன்பும், அவரது முன்னுதாரண செயற்பாடுகளும் தமிழ் மக்களது உணர்வலைகளது வெளிப்பாடாக என்றுமே நிலைத்திருக்க வல்லவை என்பது இவ்வருட நினைவு நாள்களில் முக்கியத்துவம் பெறுகிறது என்று விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைவிடுத்திருக்கும் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.(ஐ-4)

# சொல்ஹெய்ம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியிருந்தார்.

குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும அவலங்கள் குறித்து அவருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

அந்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காகவே சொல்ஹெய்ம் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

இன்று பிற்பகல் 2மணிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய பணிமனைக்கு வருகைதரும் அவர் இங்குள்ள பிரச்சினைகள் குறித்து பிரதிநிதிகளோடு கலந்துரையாடுவார். (ஐ-3)

# பதினொரு பவுண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லோகேஸ்வரி என்பவருடைய 2 பவுண் சங்கிலி -

கல்வியங்காடு வீரபத்திரர் வீதியைச் சேர்ந்த சண்முகம் நாகம்மா என்பவருடைய மூன்றே முக்கால் பவுண் தாலிக்கொடி -

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த இரத்தினவேல் சொர்ணம் என்பவருடைய 4 பவுண்சங்கிலி -

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த சி.ரஞ்சிதம் என்பவருடைய ஒன்றே கால் பவுண் சங்கிலி என்பனவே திருடப்பட்டுள்ளன. (ஐ-7-86)

# நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போன்று பக்தர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் சம்பவங்கள் பெரிய அளவில் இடம்பெறவில்லை. எனினும், இளைஞர் குழு ஒன்று தீர்த்தக்கேணியில் இருந்து நீரினை சால்வை மூலம் அள்ளிவந்து ஆலயத்தின் உள்வீதியல் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த பெண்கள் மீது வீசியது. இதனையடுத்து கடமையில் நின்ற தொண்டர்கள் அவர்களை அடையாளம் கண்டு மடக்கிப்பிடித்து உற்சவகால சிறப்புச் செயலணியில் ஒப்படைத்தனர்.

பின்னர் உற்சவகால சிறப்புச் செயலணிக்குச் சென்ற இளைஞர் குழு ஒன்று பிரஸ்தாப இளைஞர்களை விடுவிக்கும்படி கோரி அட்டகாசம் செய்தது என்றும் கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து பெண்கள் மீது சேஷ்டை புரிந்தவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் விடு விக்கப்பட்டனர். (ஐ-7)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா வைரமுத்து

சரசாலையைப் பிறப்பிடமாகவும் கப்பூது, கரணவாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வைரமுத்து அவர்கள் நேற்று (14.09.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து கந்தையா திருமதி கந்தையா சின்னம்மா ஆகியோரின் மகனும் காலஞ்சென்றவர்களான அ.இராமலிங்கம், இரா.மாணிக்கம் ஆகியோரின் அன்பு மருமகனும் திருமதி சரஸ்வதியின் அன்புக் கணவரும் பதஞ்சலி (லண்டன்), திருமதி வி. உதயசந்திரா (ஆசிரியை, ஆவரங்கால் ஸ்ரீராமலிங்க வித்தியாலயம்), சந்திரமோகன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் து.விநாயகமூர்த்தி (பிரதேசசபை உத்தியோகத்தர், பளை), திருமதி ச.சர்மிளா ஆகியோரின் அன்பு மாமனாரும் வி.லம்போதரனின் அன்புப் பேரனும் திருமதி அருளானந்தம் மகாலட்சுமி, காலஞ்சென்ற இராமலிங்கம் சதாசிவம், காலஞ்சென்ற திருமதி விநாயகமூர்த்தி பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வீரப்பதிராயன் கரணவாய் தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (16.09.2004) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணியளவில் கிராய் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(சி-37670)(32-16-11) து.விநாயகமூர்த்தி (மருமகன்)

## முருகையா கண்மணி




நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்கொண்ட முருகையா கண்மணி நேற்று (14.09.2004) செவ்வாய் மாலை காலமானார் .

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு முருகையாவின் அன்பு மனைவியும் பண்டிதர் வேலுப்பிள்ளை (சு.வே), காலஞ்சென்ற தங்கலட்சுமி, மகேந்திரராசா (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 15.09.2004 நாவற்குழியில் பி.ப. 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் பிணமுருங்கை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
சங்கக்கடை வீதி, நாவற்குழி, கைதடி. (36435) (38-11-16) சு.வேலுப்பிள்ளை (சு.வே.), சு.மகேந்திரராசா.

திறப்பு விழா அழைப்பு
இன்று (15.09.2004) புதன்கிழமை ஆரம்பிக்கப்படும்
ரொக் வீட்டுத் தளபாடம்
எமது ஸ்தாபனத்தில் அலுவலக, வீட்டுத் தேவைக்கு ஏற்ற அனைத்துப் பொருள்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
ஆர்ப்பிக்கோ, தம்றோ, நில்க்கமல் உரிய பிளாஸ்டிக் கதிரைகள், மெத்தைகள், அலுமாரிகள் மற்றும் மரத் தளபாடங்கள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
ரொக் வீட்டுத் தளபாடம்
அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் இந்நிகழ்விற்கு அன்புடன் அழைக்கின்றோம்.
கண்டி வீதி, சாவகச்சேரி ~ உரிமையாளர்
(36394)(32-16-11)



## நெஞ்சைவிட்டகலாத எம் அன்புத் தெய்வங்களின் நினைவலைகள்

பதினான்காம் ஆண்டு — முதலாம் ஆண்டு



அமரர் பொன்னம்பலம் தம்பிஐயா



திருமதி தம்பிஐயா செல்லம்மா

1915.06.19 ⇦ தோற்றம் ⇨ 1924.07.13

1990.06.26 ⇦ மறைவு ⇨ 2003.08.28

வேகுதே நெஞ்சமது வேண்டுதே இழந்த அன்பை
தேடுகின்றோம் எமை ஈர்ந்தவரை – ஆனால்
சென்றதுவே ஆண்டுகள் ஆறாது தவிக்கின்றோம்
ஆறுமே அவர்கள் ஆன்மா.

இணுவில் மேற்கு, இணுவில். (36433)(32-11-16) பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 17.09.2004 இற்கு முன் நேரில்

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...
யாழ் பயணத்தின் போது ரோல்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்!
யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: Tel: 011 2372952/3, Fax: 011 2372954
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com
இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.09.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.